உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி உ௰.] துர்மதி- வஐ தை-மீ [பகுதி ௩.

Vol. XX. January—February—1922. No. 3.

உள்ளுறை.

சோழன்மணக்கிள்ளி:—	ஸ்ரீமத். T. N. அப்பனையங்கார்	௧0௬
பல்காப்பியனார்:—	பெயர்விழையான்	௧0எ
பல்காயனார்:—	பெயர்விழையான்	௧0அ
புரூரவசரிதை:—	உதவிப்பத்திராதிபர்	௧௧௧
ஒருதிருத்தம்:—	உதவிப்பத்திராதிபர்	௧௧சு
பஞ்சசித்தாந்திகா:—	ஸ்ரீமத். R. S. நாராயணஸ்வாமி ஐயர் B.A. B.L.,	௧௧எ
அசதிக்கோவை:—	,, P. C. புன்னைவனநாதமுதலியார்	௧உ௩
அல்குல்:—	,, ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை	௧உ௫
தனித்தமிழ்ப்பரீக்ஷைவினா:—		௧உஎ
புத்தகமதிப்புரை:—	பத்திராதிபர்	௧உ௯
இராமோதந்தம்:—	ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்பிள்ளை.	

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா-8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உ௰.] துர்மதி-ஹூ தை-மீ [பகுதி ௩.
Vol. XX. January—February—1922. No. 3.

ஸ்ரீ:

சோழன்-மணக்கிள்ளி.

சில ஆண்டுகளுக்குமுன்னர்வெளிப்பட்ட சேரன்செங்குட்டுவன் என்னும் அரியபெரிய ஆராய்ச்சிநூலின்கண்ணே 'செங்குட்டுவன் சமகாலத்தரசர்' என்ற பகுதியில் மணக்கிள்ளியென்பானோர் சோழவரசன் குறிக்கப்படுகிறான். அன்றியும், அதிற் சங்ககாலத்தே சோழவரசர் உறந்தைச்சோழரென்றும் புகார்ச்சோழரென்றும் இருபகுதியினராய் அரசாண்டனரெனவும் கூறப்பட்டுள்ளது.

இவ்விருகூற்றுக்களிலும் குற்றமிருப்பதாக நினைத்து ஸ்ரீ-சோமசுந்தரதேசிகரவர்கள் சென்ற கார்த்திகைமாதச்செந்தமிழ்ப்பகுதியிலே தமதபிப்பிராயத்தை வெளியிட்டனர். மணக்கிள்ளியென்பது பெண்பாலுக்குரிய பெயரென்பதும், சோழன்மணக்கிள்ளியென்பதற்குச் சோழன்மகள் மணக்கிள்ளியென்று பொருள்கொள்ளவேண்டுமென்பதும், சோழவரசர் உறையூர்ச்சோழர் புகார்ச்சோழரென இரண்டு பகுதியினராய்ப் பிரிக்கப்படுதல் தகாதென்பதுமே அவர் கொள்கைகளாகும்.

இனி, யானறிந்தவளவில், இவ்விஷயத்தில், செங்குட்டுவன் நூலாசிரியர்கொள்கைகளே தகுதியுடையனவாமென்பதுபற்றிச் சில கூறுவேன்.

சோழன்மணக்கிள்ளியென்ற பெயர் பதிற்றுப்பத்தின் ஐந்தாம்பதிகத்திலே வருகின்றது. அதில்,

"வடவ ருட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சே ரலாதற்குச்
சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன்"—

என்று செங்குட்டுவன் கூறப்படுகின்றான். அதிலுள்ள சோழன்மணக்கிள்ளி யென்றதொடரை நோக்கும்போதே அது ஆண்பாற்பெயரென்பது யார்க்கும் புலனாகாதிராது. ஆதலின், 'செங்குட்டுவன்' நூலாசிரியரும் அங்ஙனமே கொண்டனர். மணக்கிள்ளியென்பது ஆண்பாற்பெயராகவே, 'மணக்கிள்ளியீன்றமகன்' என்பதிற் பொருள் விளக்கமெய்துமாறில்லை. ஆதலின் அவர் 'மணக்கிள்ளிமகளீன்றமகன்' என ஒருசொற் பெய்து அதனைப் பொருளொடுபொருத்திக்காட்டிச் சேரன் செங்குட்டுவனுக்குத் தந்தை நெடுஞ்சேரலாதனென்றும், தாய் சோழன் மணக்கிள்ளிமகளென்றும் வெளிப்படுத்திச்சென்றனர்.

இஃதிங்ஙனமாகவும், தேசிகரவர்கள், "இதனானே நெடுஞ்சேரலாதற்குச் சோழன்மகள் மணக்கிள்ளியென்னும் கோப்பெருந்தேவியின் மகனாகக் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்பிறந்தா னென்பதன்றி, மணக்கிள்ளியென ஒருசோழ னிருந்தானென்றும் அவனுக் கொரு பெண்ணிருந்தாளென்றுங் கூறுதற் கில்லை" என்று கூறினர். அவருடையகொள்கைக்குமே, சோழனென்பதற்கும் மணக்கிள்ளியென்பதற்கு மிடையே மகள் என ஒருசொல் வருவித்துரைக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, இருவருடையகொள்கைக்கும் மகளென்ற ஒருசொல்லை முன்னே பின்னே வருவித்துப் பொருள்கொள்ளவேண்டுவது இன்றியமையாதாகின்றது. அங்ஙனம்செய்தலில் எது மிகவும் பொருத்தமுடையதென்பதே ஈண்டாராய்ந்தறிய வேண்டுவதாகும்.

சங்கநூல்களிற் பலவிடங்களிலும் நலங்கிள்ளி, திருக்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருநற்கிள்ளி, கோக்கிள்ளி நெடுமுடிக்கிள்ளி என்றற்றொடக்கத்துச் சோழவரசர்கள்பெயர் காணப்படுகின்றன. அவற்றுளொன்றேனும் பெண்பாலை யுணர்த்தாமையின் அவற்றோ டொப்புமையுடைய மணக்கிள்ளியென்னும் பெயரும் பெண்பாலையன்றி ஆண்பாலையே யுணர்த்தவேண்டுமென்பது தெளிவாம்.

அஃதன்றியும், தேசிகரவர்கள்கொள்கைப்படி மணக்கிள்ளியென்பது சோழன்மகளையே குறிப்பதாயின், அவள் செங்குட்டுவன்றாயும்

நெடுஞ்சேரலாதன்மனைவியுமாகவேண்டும். ஆனால், செங்குட்டுவன்றாயும் நெடுஞ்சேரலாதனுடையமனைவியும் இன்னாரென விளங்கக்கூறுகின்ற பிறிதொருசான்றோடு அது மாறுகொள்ளுதலின் அக்கொள்கை வலியற்றதாகின்றது.

சிலப்பதிகாரப்பதிகத்தின்றொடக்கத்தில், "குணவாயிற்கோட்டத் தரசு துறந்திருந்த, குடக்கோச்சேர லிளங்கோவடிகட்கு" என்பதனுரையிலே அடியார்க்குநல்லார், இளங்கோவை அடிகளெனக்கூறியதன்வரலாற்றை விளக்குமிடத்து, "குமரியொடுவடவிமயத்-தொருமொழிவைத் துலகாண்ட-சேரலாதற்குத் திகழொளிஞாயிற் றேழ்பரிநெடுந்தேர்ச் சோழன்றன்மக ணற்சோணையீன்றமக்களிருவருண் முன்னோன்" எனச் செங்குட்டுவனைக் குறிப்பிடுதலானே அவன்றந்தை நெடுஞ்சேரலாதனென்பதும் தாய் நற்சோணையென்பதும் தெள்ளிதிற் புலனாகும். ஆகவே, அவன்றாய் மணக்கிள்ளியென்பது சிறிது மொவ்வாதாம்.

இதுகாறுங் கூறியவற்றால், மணக்கிள்ளியென்பது ஒரு சோழன் பெயரேயென்பதும், அவன்மகளே நற்சோணையென்றபெயருடன் செங்குட்டுவன்றாயாகவும் நெடுஞ்சேரலாதனுடைய கோப்பெருந்தேவியாகவும் கருதப்படுகின்றாளென்பதும் இனிது விளங்கும்.

இனி, சோழன் மணக்கிள்ளியென ஒருவனிருந்தானெனச் சங்கநூல்களிற் பிறிதோரிடத்துங் காணப்படாததென்னையெனின், அது கடாவன்று; என்னை? மணக்கிள்ளியென்பது தேசிகாவர்கள்கொள்கைப்படி பெண்பாற்பெயரேயாயினும் மதன்கண்ணும் மக்குற்றந் தங்குமாதலினென்பது. ஒரிடத்தன்றிப் பிறவிடங்களிற் காணாத எத்துணையோ பெயர்கள் சங்கநூல்களிற் காண்கிறோம்.

நிற்க, பதிற்றுப்பத்தின்பதிகங்கள் ஒவ்வோரரசனையும் இன்னாரீன்ற மகனெனக் கூறப்புக்கதுழியெல்லாம் பெண்பாலையுணர்த்தி, அவளீன்ற மகன் எனக்கூறுதலே வழக்காறாகவுடைமையைத் தேசிகாவர்கள் தம் கொள்கைக் குற்றதுணையாகக் கருதுகிறார்கள். இஃ திருவகைக்கொள்கைக்கு மொக்கும். சோழன்மணக்கிள்ளியீன்றமகனென்பது 'சோழன் மணக்கிள்ளிமக ளீன்றமகனெனவிரியுங்கால், சோழன்மணக்கிள்ளி மகளெனப் பெண்பாலை முன்னருணர்த்திப் பின்னர் அவளீன்றமகன்

செங்குட்டுவனென அமைவுடையதாகக் காணப்படும். படவே, பதிற்றுப் பத்தின்பதிகந்தோறு மங்ஙனமாகவுள்ள வாக்கியங்களைத் தேசிகரவர்க ளெடுத்துக்காட்டுவது பயன்பெறாதாயிற்று.

சோழன்மணக்கிள்ளியின்றமகனென்னுஞ் சொற்றொடருள்ள நிலையில் அதற்குச் 'செங்குட்டுவன்' நூலாசிரியர்கூறியதன்றிப் பிறிதொரு சிறந்தபொருள்காண்டல் எவ்வாற்றானு மியலாதாகும்.

இது நிற்க. தேசிகரவர்கள், சோழவரசரில் உறையூரையாண்டவர்க ளென்றும் புகாரையாண்டவர்களென்றும் இருபிரிவினரிருந்தனராகக் கொள்ள ஏதுவில்லை யென்றனர். 'சேரன்செங்குட்டுவன்' நூலிலேயே செங்குட்டுவன்சமகாலத்தரச ரென்ற பகுதியில் அக்கொள்கைக்குற்ற காரணங்கள் விளங்கவுரைக்கப்பட்டிருக்கின்றன.

பண்டைத்தமிழ்நூல்களைக் கருவியாகக்கொண்டு சேரசோழபாண் டியருடைய நாடுநகரங்களின்நிலையினையாராய்வார்க்குச் சோழநாட்டின் கண்ணே ஒத்தசிறப்புடன்விளங்கிய இரண்டுதலைநகரங்களிருந்தனவென் பது எளிதிற் புலப்படும். பாண்டியர்க்கு மதுரையும் சேரர்க்கு வஞ்சியும் எத்துணைசிறப்புடையனவோ, சோழர்க்குஅத்துணைசிறப்புடையன புகாரும் உறையூருமாகிய இரண்டு தலைநகரங்களுமாகும். முடியுடைத்தமிழ் வேந்தர்மூவருடைய தலைநகரங்களையுங் கூறப்புகுந்த பழைய தமிழ் நூல்கள், அவற்றைப் புகார் மதுரை வஞ்சி யென்ற முறையிலேனும், உறையூர் மதுரை வஞ்சி யென்றமுறையிலேனுங் குறிப்பிடுதலே இதற் குப் போதியசான்றாகும். சிலப்பதிகாரக் காண்டப்பகுப்புமுறையில் மதுரை வஞ்சி இவற்றிற்கு நிகரான சிறப்புடன் சோழர்க்குரியநகரம் புகாராக அறியப்படுகின்றது. சிறுபாணாற்றுப்படையில் வஞ்சி மதுரை உறந்தையென்றமுறை காணப்படுகிறது.

"நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப
வேம வின்றுயி லெழுத லல்லதை
வாழிய வஞ்சியுங் கோழியும் போலக்
கோழியி னெழாதெம் பேரூர் துயிலே".

எனவரும் மதுரையைக்குறித்த பரிபாட்டினாலும் உறந்தையே சோழர் தலைநகராய் மதுரை வஞ்சி, இவற்றோடொப்பிடத்தக்கபெருமையுடைய தென்று விளங்குகிறது. சிலப்பதிகார வேனிற்காதையிலே,

"நெடியோன் குன்றமுந் தொடியோள்பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு
மாட மதுரையும் பீடா ருறந்தையும்
கலிகெழு வஞ்சியு மொலிபுனற் புகாரு
மரைசவீற் றிருந்த உரைசால் சிறப்பின்
மன்னன் மாரன் மகிழ்துணை யாகிய
இன்னிள வேனில்".

என வருதலைக் கற்றூர்பலரும் நன்கறிவர். அதன்கட் சேர பாண்டியர்க்கு ஒவ்வொரு தலைநகாமும் சோழர்க்கு அவற்றிற்கிடாக இரண்டு தலைநகாங்களுங் குறிக்கப்படுகின்றன. ஆக இவற்றால், சோழவரசர் புகார் உறந்தையென்னுமிரண்டையுமே சிறந்த தலைநகாங்களாகக்கொண்டு ஆட்சிபுரிந்துவந்தனரென்பது நன்குவிளங்கும். சோழர்க்கு இரண்டு தலைநகாங்களிருந்தனவாகவே சோணடு இரண்டுராஜதானிகளாக அக்காலத்துப் பிரிக்கப்பட்டிருந்தமையும் எளிதி னுணரப்படும்.

ஆதலி னங்ஙனம் பிரிவுபட்ட இரண்டு ராஜதானிநகாங்களிலும் சோழர்குடிக்குரிய இருவேறு அரசர் நிலைபெற்று ஆட்சிபுரிந்துவந்தனரெனக் கொள்ளுதலும் நேர்மையுடையதேயாகும். "ஒருபுலவர் ஒரே வேந்தர்வம்சத்திற் பலரைப் பாடும்படிநேர்ந்ததற்கு இதுவே காரணமாகும். இவ்வாறு கொள்ளாவிடத்துப் பலவரசர் ஒரேவம்சத்தில் ஏககாலத்தில் இருந்தவராகக் காணப்பட்டுச் சரித்திரவொற்றுமைபெறுவதில் மயக்கங்கொள்ள நேரும்". (சேரன்-செங்குட்டுவன்.-பக்கம்—101).

இனி, அவ்வகை ஆட்சிபுரிந்தவர்களிற் புகார்ச்சோழர்க்கும் உறையூர்ச்சோழர்க்கும் பெரும்போர்மூண்டிருந்ததாகவும் சங்கநூல்களா லறியப்படுகின்றது.

புகாரிலிருந் தரசாண்டவர்களிற் சோழன் நலங்கிள்ளியென்பானொருவன் புலவனும் போர்வீரனுமாகச் சிறந்து விளங்கினன். (புறம் 30, 45, 47) அவன் தன் தாயத்தானும் உறையூர்ச்சோழனுமாகிய நெடுங்கிள்ளியுடன் போர்கருதி உறையூரை முற்றுகையிட்டனன். 'சோழன் நலங்கிள்ளி உறையூர்முற்றியிருந்தானையும் அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் கோவூர்கிழார்' பாடிச் சந்துசெய்ததாகவுள்ள புறப்பாட்டொன்று மிகுதியு மழகமைந்ததாகக் காணப்படுகின்றது.

" இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்லன்
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே, நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
இருவீர் வேற லியற்கையு மன்றே, அதனாற்
குடிப்பொ ருளன்றுநுஞ் செய்தி, கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே"

நும்முண்மாறுபடு மொவ்வொருவனும் நும்பகைவனாகிய சேரனு மல்லன், செழியனுமல்லன் ; நுங்களிருவருடைய கண்ணியும் ஆத்தியாற் செறியக்கட்டப்பட்டது; (நும்முளொவ்வொருவனும் சோழனே) ஆகலால் நும்முள் ஒருவீர்தோற்பினுந் தோற்பது நுங்குடியன்றோ? இருவிரும் வெல்லுதல் இயல்புமன்று; ஆதலால் நும் குடிக்குத் தக்கதன்று நுமதுசெய்கை; நும்போன்ற வேந்தர்க்கு உடம்புபூரிக்கு முவகையைச்செய்யு மிம் மாறுபாடு ; ஆதலா லிது தவிர்தலே நுமக்குத் தக்கது என்பதே அதன்பொருள். இதனால் உறந்தையிலும் புகாரிலும் ஏககாலத்திலேயே இருவேறு அரசர்கள் நிலைபெற்றிருந்தனரென்பதும், இருவரும் ஒருகுடிக்குரியோரென்பதும் அவர்கள் தாயத்தாராதலிற் பகைமையுற்றிருந்தனரென்பதும், அத்தகைய பகைமையும் நல்லோரால் கனிவெறுக்கப்பட்டதென்பதும் அறியக்கிடக்கின்றன.

இதுகாறுங்கூறியவற்றால், புகாரும் உறந்தையுமாகிய இரண்டுநகரங்களிலும் ஒருவர்பின்னொருவராக ஒரேகுடிக்குரிய வெவ்வேறரசர்கள் நீண்டகாலம் ஆட்சிபுரிந்துவந்தமை யறியப்பட்டது. ஒருவர்பின் ஒருவராக அரசாண்ட பல அரசர்களையும் ஒருபாம்பரையினரெனல் தகுதியுடையதேயாகும். ஆகையாற் 'சேரன் செங்குட்டுவன்' என்னும் புத்தகத்திற் சோழவரசர் இருபாம்பரையினராகப் பகுக்கப்பட்டமையும் பொருத்தமுடையதென்றே தோன்றுகிறது. ஆதலின் இத்தகைய இடங்களில் மிகவும் நுணுகிச்செல்லுகின்ற அந்நூலாசிரியருடைய ஆராய்ச்சியின்வன்மை தமிழறிஞர் பலராலும் பெரிதும் பாராட்டத்தக்க தன்றிப் பிறிதன்று. அவர்மாட்டுத் தமிழுலகியற்றுங் கைம்மாறு மதுவேயாகும்.

T. N. அப்பனையங்கார்,

சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.

ஸ்ரீ:

பல்காப்பியனார்.

இவர் தொல்காப்பியனாரொடு ஒருசாலைமாணாக்கராய் ஆசிரியர் அகத்தியனாரிடத்திற் கல்விபயின்ற பன்னிருவருள் ஒருவர் என்ப. இவர் செய்தநூல் பல்காப்பியம் எனப்படும். அது தொல்காப்பியத்தின் வழிநூல் எனப்படுகின்றது. இவ்வாசிரியரைப்பற்றியும் இவரது நூலைப் பற்றியும் பேராசிரியர்கூறியவை ஈண்டைக்கு வருமாறு:—

"மற்றுப் பல்காப்பியம் முதலியனவோவெனின் அவை வழி நூலே: தொல்காப்பியத்தின் வழித்தோன்றின எனபது. என்னை ?

"கூறிய குன்றினு முதனூல் கூட்டித்
தோமின் றுணர்தல் தொல்காப் பியன்ற
னாணையின் றமிழறிந் தோர்க்குக் கடனே"

என்பவாகலானும், இவ்வாசிரியர் (தொல்காப்பியர்) பல்காப்பியர் பல்காயனார் முதலாயினோரை அவ்வாறு கூறாராகலானும் என்பது. எனாஅர்க்குத் தொல்காப்பியம் கிடப்பப் பல்காயனார் முதலியோர் நூல்செய்தது எற்றிற்கெனின், அவரும் அவர் செய்த எழுத்தும் சொல்லும் பொருளும் எல்லாம் செய்திலர்: செய்யுளிலக்கணம் அகத்தியத்துப் பரந்து கிடந்ததனை இவ்வாசிரியர் சுருங்கச்செய்தலின் அருமைநோக்கிப் பகுத்துக்கூறினாராகலானும் அவர் தங் திறத்துக்கேற்ப முதனூலொடு பொருந்த நூல்செய்தாராகலானும் அமையும் என்பது." [தொல். மரபி. 95. பேரா. உரை.] "அகத்தியர்வழித்தோன்றிய ஆசிரியர் எல்லாருள்ளுந் தொல்காப்பியனாரே தலைவர் எனபது எல்லா ஆசிரியரும் கூறுப என்பது. எங்ஙனமோவெனின் 'கூறியகுன்றினு.......கடனே'—என்பது: இது பல்காப்பியப்புறனடைச்சூத்திரம்."

[ஷெ. ஷெ. 94-ஷெ. ஷெ.] என்பனவாம்.

மேற்கூறிய இவற்றால், தொல்காப்பியனார் ஒருவரையே தலைவரென-அகத்தியர்வழித்தோன்றிய (ஆசிரியர்) பன்னிருவருள் ஏனையர் ஒகினார் என்பதும், அப்பன்னிருவருள் ஒருவராகிய இவ்வாசிரியரும், 'தமிழறிந்தோர்க்குக்கடன் தொல்காப்பியன ஆணையின்படி முதனூல்கூட்டிக் குற்றமின்றி உணர்தல்வேண்டும்' என்றார் என்பதும், தொல்காப்பியனார் கூறிய எழுத்தும் சொல்லும் பொருளும் எல்லாங்கூறாது செய்யுளிலக்கணத்தையே அவரவர் தந்திறத்துக்கேற்ப முதனூலொடுபொருந்தப் பல்காயனார் முதலிய பதினொருவரும் கூறினார் என்பதும், அங்ஙனம் கூறினும் அவர்கூறிய நூல்களியாவும் தொல்காப்பியத்தின் வழிநூலாகவே கொள்ளப்பட்டன என்பதும் பிறவும் புலனாம். இவ்வாசிரியர் காலம் தொல்காப்பியனார் என்ற பொருளுரைநோக்கி யறிக.

பெயர்விழையான்,
தச்சநல்லூர்.

ஸ்ரீ:

பல்காயனார்.

பொதியத்தமர்ந்த மலயமாதவனெனப்படும் அகத்தியனார்மாணவர் பன்னிருவருள் இவரும் ஒருவர் என்ப. இவரியற்றிய நூல் பல்காயம் எனப் பெயருறும். அது, யாப்பருங்கலவிருத்தியுரையிலும் குணசாகருரையிலும் பெரிதும் பாராட்டிஎடுத்தாளப்பெறும் சிறப்பினையுடையது.

இவர் யாப்பிலக்கணத்தினை ஆசிரியர் தொல்காப்பியரையும், காக்கைபாடினியரையும்போலாது பகுத்துரைத்தனர் என்பர். இதனை,

> "தொல்காப் பியப்புலவர் தோன்ற விரித்துரைத்தார்
> பல்காய னார்பகுத்துப் பன்னினார்—நல்யாப்புக்
> கற்றோர் மதிக்குங் கலைக்காக்கை பாடினியார்
> சொற்றார்தந் நூலுட் டொகுத்து."

[யாப் - கலம். எழுத் - 1. விருத்தியுரை].

என்ற சூட்டுரையான் அறிக.

இவர் தொல்காப்பியனாரொப்ப இயற்றமிழ்க்கு இலக்கணமாகிய எழுத்து சொல் பொருள் என்றவையெல்லாம் செய்யாது யாப்பிலக்கணமொன்றே பகுத்துச்செய்தனர் என்ப. இது, "தொல்காப்பியம் கிடப்பப் பல்காயனார் முதலியோர் நூல்செய்தது எற்றிற்கு எனின், அவரும், அவர் (தொல்காப்பியர்) செய்த எழுத்தும் சொல்லும் பொருளும் எல்லாம் செய்திலர். செய்யுளிலக்கணம் அகத்தியத்துப் பரந்துகிடந்ததனை இவ்வாசிரியர் சுருங்கச்செய்தலின் அருமைநோக்கிப் பகுத்துக் கூறினாராகலானும், அவர் தந்திறத்திற்கேற்ப முதனூலொடுபொருந்த நூல் செய்தாராகலானும் அமையும் என்பது." [தொல்-மரபி-95-பேரா-உரை] என்று பேராசிரியர் கூறியவாற்றான் அறியப்படும்.

இனி, இக்காலத்தவர்சிலர், பல்காயனார் எனப் பெயர்பெற்ற இவ்வாசிரியருடன் பல்காப்பியர் என்ற பெயருடைய ஆசிரியரையும் ஒருவராகக்கொண்டு மயங்குவர். பல்காப்பியர் வேறு, பல்காயனார் வேறு. இருவரும் தொல்காப்பியத்தின்வழிநூலாக வேறு வேறு பல்காப்பியம்,

பல்காயம் என்ற முறையே நூல் செய்தனராவர். இன்னேரை,- "பல்காப்பியனுர் - பல்காயனுர் - முதலாயினுர்" [தொல் - மாபி - பேரா - உரை] எனத் தனித்தனிகூறுமாற்ருன் அறிக.

இவ்வாசிரியர் முதலாயினேர், தோல்காப்பியனுரே தலைவர் என மொழிவர் என்பர் பேராசிரியர். இது - "அகத்தியர்வழித்தோன்றிய ஆசிரியரேல்லாருள்ளுந் தோல்காப்பியனுரே தலைவர் எனபது எல்லா ஆசிரியருங் கூறுப வென்பது" [தொல் - மாபி - 94 - பேரா - உரை] என்றதனுற் புலனுகும்.

இவ்வாசிரியர் யாப்புறுப்பாகத் தளையென ஒன்று வேண்டியவருள் ஒருவர். இது-

"இமிழ்கடல் வரைப்பி னெல்லையின் வழாஅத்
தமிழியல் வரைப்பிற் ருனினிது விளங்க
யாப்பிய ருனே யாப்புற விரிப்பி
னெழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கோ
டிழுக்கா மாபி னிவற்ருெடு பிறவு
மொழுக்கல் வேண்டு முணர்ந்திசி னேரே."

[யாப் - கலம் - எழுத் - 1 - விருத்தியுரைமேற்கோள்] என்றதனுல் அறியப்படும்.

இச்சூத்திரம் பல்காயத்தின் தலைச்சூத்திரம் என எண்ணப்படுகின்றது. இதன் நான்காம் அடி யாப்பருங்கலமுடையாரால் எடுத்தாளப்பட்டுள்ளது.*

இவ்வாசிரியர் குற்றியலுகரத்தைத் தொல்காப்பியனுர்கொண்டவாறு அமைந்திலர். "ஏழிடத்து ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து உகரம் வந்தால் அதனைக் குற்றியலுகரம்"-என்பர்:—"எழுவகை யிடத்துங் குற்றியலுகரம்-வழுவின்றி வரூஉம் வல்லா றூர்ந்தே' என்ருர் பல்காயனுர் [யாப் - கலம் - எழுத் - 2 - விரு - உரை-மேற்]. என்றதனுல் அறிக. இவர் கொண்ட எழுவகை யிடம்,

---

* "எழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கொ
டிழுக்கா' நடைய தியாப்பெனப் படுமே"-
யாப்பருங்கலம் - எழுத்தோத்து 1 சூத்திரம்.

*" நெடிலே குறிலிணை குறினெடி லென்றிவை
யொற்றெடு வருதலொடு குற்றெழுத் திறுதியென்
றேழ்குற் றுகரக் கிடனென மொழிப"

[௬௨ - ௬௨ - ௬௨ - ௬௨ - ௬௨ - ௬௨] என்பதனுல் அறிக.

இவர் 'அடிவகை எண்ணம்பட எடுத்திற்றிலர்' என்பர் யாப்பருங் கலவிருத்தி [அடியோ 1 -] உரையாசிரியர்.

இன்னும், இவ்வாசிரியர் தொல்காப்பியனுர்மதத்தைத்தழுவி அசைகளை நேர் - நிரை - நேர்பு - நிரைபு என நான்காகப் பகுத்தெடுத்தோதி, நாலசைப்பொதுச்சீரினையும் காக்கைபாடினியார்மதத்தினைத் தழுவி எடுத் தாட்சிசெய்தார். நாலசைகொண்டபின்னரும் நாலசைப் பொதுச்சீர்கோடல் தொல்காப்பியனுர்க்கு மாறுபாடாகும். நாலசைப் பொதுச்சீர்கொண்டு, பின்னும் நேர்பு - நிரைபு - என்னும் அசைகளையும் தழுவிக்கோடல் காக்கைபாடினியார்க்கு மாறுபாடாகும்.†

இனி, "ஆசிரியத்தொடு வெள்ளைக் கலியும் - நேரடி தன்னு னிலைபெற நிற்கும்" "என்று பொதுவகையாற் சொல்லி ஆசிரியப்பாவே கொண்டார் பல்காயனுர்" [யா - கலம் - சீரோ - 7. விரு - உரை] என வருமாற்ருன் இவ்வாசிரியரின் மதமொன்று புலனுதல் காண்க.

பன்னிருபாட்டியலுள், தாண்டகவிலக்கண இயலைக் குறித்த மூவருள் விரித்துக்கூறியவர் இவரே. இவர் காலவரலாற்றினைத் தொல்காப்பியர் என்னும் ஆராய்ச்சிநோக்கி யறிக.

பெயர்விழையான்,

தச்சநல்லூர்.

---

* நெடிற்கீழும், 2 குறிலிணைக்கீழும், 3 குறில்நெடிலின்கீழும், 4 நெடிலொற்றின்கீழும், 5 குறிலிணையொற்றின்கீழும், 6 குறினெடிலொற்றின்கீழும், 7. குற்றெழுத்தின்கீழும் எனப் பிரித்தறிக.

ஆசிரியர் தொல்காப்பியனுரும் நன்னூலுடையாரும் சொற்புணர்ச்சியின் செய்கைநோக்கி உயிர்த்தொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர், வன்றொடர், மென்றொடர், நெடிற்றொடர் என மொழியினைப் பற்றுக்கோடாக்கொண்டு மொழிவர். [தொல் - மொழிமரபு - 3. தெ. குற்றியலு - 1. நன் - எழுத் - 39]

† தொல்காப்பியர் நேர், நிரை, நேர்பு, நிரைபு என்ற நாலசைகளையே கொண்டனர். நாலசைப்பொதுச்சீர்வேண்டிலர். காக்கைபாடினியர் நேர் - நிரை என்ற இருசீர்மட்டும் வேண்டி நேர்பு - நிரைபு என்பனவைகளைக் கொள்ளாது நாலசைப்பொதுச்சீர்களைத் தழுவிக்கொண்டவர். [யாப் - கலம் - சீரோத்து 1. விரு - உரை - நோக்க].

ஸ்ரீ:

புரூரவசரிதை.

இந்நூல், சந்திரகுலதிலகனுகிய புரூரவசக்கரவர்த்தியின்சரித்திரத்தைச் செவ்வியசெய்யுணடையில் விரித்துரைப்பது. இதை இயற்றியவர் பெயர் காலம் முதலியவற்றை முன்பு செந்தமிழ்ப் பத்திராசிரியரா யிருந்த ஸ்ரீ உ. வே. மு. இராகவையங்காரவர்கள் நன்கு விளக்கியுள்ளார்கள். (செந்தமிழ்த் தொகுதி-6 பக்கம்-81-82.) இந்நூலின் ஏட்டுச்சுவடியொன்று நம் தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன்புத்தகசாலையில் உள்ளது. அதில் முதலில் நகரப்படல முடிவுவரை ஓலைகள் இருமுனையும் ஒடிந்து சிதைந்தும், பின்னுள்ள மற்றைப்படலங்களில் இடையிடையே பூச்சியரித்து வரிவடிவழிந்தும் இருக்கிறது. மேலும் ஒடிந்தும் பூச்சியரித்தும் அழிந்துபோகாதபடி பாதுகாக்கும்பொருட்டு ஒடிந்து சிதைந்தவைநீங்க மற்றவற்றை ஏட்டிலுள்ளபடியே செந்தமிழில் வெளியிட்டுவரவெண்ணி, முதலில், புரூரவா உற்பத்திப்படலம் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனைக்கண்ணுறும் அறிஞர்கள், தங்களிடம் இந்நூற்பிரதிகள் இருந்து கொடுத்துதவுவார்களாயின் இந்நூலைத் தனிப் புத்தகமாகப்பதித்துச் செந்தமிழினிறுதியிற்சேர்த்து வெளியிட அநுகூலமாயிருக்கும்.

உதவிப்பத்திராதிபர்.

புரூரவா உற்பத்திப்படலம்.

ஆழியா னுந்திவரு மயனருளூ மத்திரியாம்
வாழியார்க் கனசூயை வயிற்றிலுடு பதியுதித்தாங்
கூழினுன் மறையனைத்து மொருங்குணர்வான் பெருங்குணத்துத்
தாழுமா கடலனைய பொன்னவன்பாற் சார்ந்தனனால். (க)

இருக்காதி மறையனைத்து மின்னளியாற் பொன்னுதவப்
பெருக்காறு புகுங்கடல்போ லூத்தடங்கப் பெறுநாளின்
முருக்கான செந்துவர்வாய் முத்தமணி வெண்முறுவற்
குருக்காத லுறுமனைவி யுடுபதியைக் குறுகினள். (உ)

செம்பதும மலர்பொருவுஞ் சிறடியுஞ் செறிகழலு
மம்பரந்த திருவரையு மணிநூலு மணிமார்பும்
பைம்பொனெடு வரையனைய பணைப்புயமும் வலயமும்பார்த்
தும்பரமு தொழுகுதிரு வதனமுங்கண் ணுற்றனளால். (௩)

கண்ணுற்றாள் கண்ணுறலுங் காமுற்றாள் காமசரப்
புண்ணுற்ற நெஞ்சம் பொருமப் பொருமுற்றா
ளெண்ணுற்ற கூற்ற மெதிர்ந்திடினு மீர்ந்துயிரை
யுண்ணுற்ற பார்வை யுடுபதிமேல் வீசினாள். (௪)

வீசும் விழிவலைக்குள் வீழ்த்திக் கருப்பூர
வாச மலிகுமுத வாய்த்தேன் வழங்கினவா
லாசை மதிவந் நடுக்கிலாக் காம்பனறை
நேசமுட னாற்றாது நிற்குமோ நில்லாதே. (௫)

காரையுங் கக்குலையும் வென்ற கருங்கூந்தற்
றாரையுஞ் சந்திரனுந் தன்னந் தனியமா
றாரையு மன்றி யொருவினா றூழியின்முந்
நீரையு முண்ணு நெருப்பெனப்போ னெஞ்சழன்றான். (௬)

ஆரோடு மின்ன துரைத்த லழகாகா
காரோதி தன்னைக் கொணர்கடனே தென்றுணர்ந்து
வேரோடு மாமறைதேர் விண்ணோர் தொழுங்குரவன்
றாரோ டுயர்ந்தபுயச் சந்திரனை வந்திரந்தான். (௭)

அன்னவனை வேண்டி யணங்கை விடுத்தியெனப்
பொன்னவன் கூற மறுத்தனனப் பொன்னவனு
மன்னவ னான புரந்தரற்கிவ் வாறுரைப்ப
வின்ன னுழந்து கறுவோ டெழுந்தனனால். (௮)

வானவர் கோமான் வருவதறிந் தேமதியும்
தானவர் மந்திரியைச் சார்ந்தனைத்துஞ் சாற்றுதலு
மானவனு மஞ்ச லெனவபய மீந்தருளி
யேனை யசுரர் படையனைத்து மீட்டினான். (௯)

ஈண்டு மசுரர் படையுமிமை யோர்படையுந்
தாண்டு மமர்விளைப்ப விண்ணோர் தொலைந்திடலுங்

காண்ட மலரோனைக் கலைமதியைக் கைதீண்டி
வேண்டி யருளுதலாற் றாரை தனைவிடுத்தான். (க0)

பேராசை யான பிரகற் பதியுநரைக்
காரார் குழலாளு முன்போற் கலந்தனரால்
வாரார்முலையாண் மணிவயிற்றி னூடிருந்த
வேராரும் பச்சை யிளங்குழவி தோன்றிற்றே. (கக)

தோன்றிய தோன்றலினை நோக்கிச் சுரர்குரவ
மான்ற மகிழ்ச்சியுட னுங்குவிளை யாடுதலுங்
கான்ற கலைமதியோ னுட்கசிந்து கான்முளையைத்
தான்றனியே யெத்தி யெடுத்தகன்றான் றன்னுழையில். (கஉ)

புந்தி தனைமதிகொண் டேகப் பொறியிலனு
யந்தணனும் போக லருமகவை யீதியெனச்
சந்திரனு மென்கான் முளையென்று சாற்றுதலு
முந்தி யுதித்த வொருமுதல்வ னேதுவான். (கங)

நீவி ரிருவீரு நின்மி னெனநெடிய
காவி விழியாள் கருத்தறிவோ மென்றுசெழும்
பூவின் மயிலேயிப் புந்தியெவர்க் குற்றதென
நாவி நறுங்குழலா ளொன்று நவின்றிலளால். (கச)

வாயான் மொழியாள் மனக்கருத்தை யோர்ந்தெவர்க்குந்
தாயாம் பிதாமகனுஞ் சந்திரனார் மைந்தனெனத்
தேயாக் குணத்தாலுஞ் சீராலுங் கண்டுபுலன்
றேயாப் பிரகற் பதிதனக்குச் சொல்லினன். (கரு)

மன்பதைக ளெல்லாம் வகுத்தான் வகுத்தமொழி
கொன்படுவ துண்டோ வெனமனத்திற் கொண்டருணப்
பொன்பதனைச் சந்திரன்றன் புத்திரனென் றேயழையா
வன்பினொடு விஞ்சைக் கருமையா சாக்கினன். (கசு)

அக்காலத் தயனருளு மரீசியருட் காசிபனார்
திக்காசு தவிர்த்தகதிர்ச் செல்வரையீன் றிட்டவரின்
மிக்கான விவச்சுவைவச் சுதமனுவாம் வேந்தைநலத்
தொக்கான விளைதி யவன்வயிற்றிற் றோன்றினர். (கள)

இளைரசு புரிந்தருளி யெவ்வரசு மினிதிறைஞ்ச
வளைபுணரி வளாகத்து மனுமுறைசெய் திடுநாளில்
விளைவதனை யறியாமல் வேட்டமா டுதல்விரும்பி
யுளைவயப்போர்ப் புரவியின்மேற் சேனைகளி னுடன்சென்றான். (௧அ)

பனிவரையும் பொற்குடுமிப் பருப்பதமு நிடதமெனுந்
தனிவரையுங் கடந்தேகிக் கந்தமா தனஞ்சார்ந்து
புனிதமுறு நீலகிரிப் புறம்போகிமாலியவா
னெனும்வரையி னெடுஞ்சார லெய்தினனவ் விகல்வேந்தன். (௧௯)

வேறு.

அவ்வ ரைப்புறத் தடவி யாவினுங்
கைவ ரைக்குலங் கரிய மாவரி
மெய்வ ரைப்பெரும் வேங்கை செற்றனன்
றெவ்வ ரைப்பொருங் கணைசெ லுத்தியே. (௨0)

வரிவின் மன்னவன் வாளி யஞ்சியே
சுரிசெ யும்வலைச் சுற்றுமுற்ற வெங்
கரிய மாவினஞ் சுழலுங் காட்சிய
திரியு மெந்திரத் தன்மை சேருமால். (௨௧)

மணிபொ ரும்பொறிப் புலியின் வாயினிற்
றிணிநெ டுங்கணை சென்று பாய்வன
வணிசெய் விஞ்சையாட் டயரு வோரயக்
குணில்வி ழுங்குறுங் கொள்கை போலுமே. (௨௨)

அருண னுந்துதோ லரியகான்முளை
வருண வம்பிறை லஞ்சி வாவுவ
வருண னம்புலிக் கவன்ம ணப்பகை
...ருணனேறுறு .... தடிக்குமால். (௨௩)

கான கத்தரி கடிய மாவெலாம்
கான கத்தரி கடிவதொத்தனன்
கான கற்றுயல் கன்னி சோர்தரக்
கான கந்தொறுங் காவன் மன்னனே. (௨௪)

மன்னு மக்கிரி வருண திக்கினி
லுன்னி வான்மிசை யோங்கி நாடொறுந்
துன்னு செங்கதிர்ப் பரிதி சூழ்வரும்
பொன்னின் மால்வரைச் சாரல் புக்கலும். (௨௫)

முக்க ணுயசுற் புணரு முற்றிழை
யிக்க ணெய்தினோர் பெண்மை யெய்திடத்
தக்க தென்றுமுன் னிட்ட சாபத்தான்
மைக்க ணுயிழை வடிவ மாயினான். (௨௬)

அந்த வார்குழ லிளையி னைப்புதன்
கந்த வார்பொழி லூடு கண்ணுறு
மந்த மாருதத் தேரின் மாரனம்
புந்தி னனவ னுள்ளி னுள்ளரோ. (௨௭)

அரிவை யும்மவ னழகு கண்டழிந்
துருகி யன்பினி லிருவ ருள்ளமும்
பெருகு தூதுசென் றேது பெற்றியான்
மருவி னருல கனைத்தும் வாழவே. (௨௮)

விளையு மன்பினிற் புதனு மின்னிழை
யிளையு மின்பவா ரிதியி னெய்துநாள்
வளையும் வையமும் வானும் வாழவே
தளரு நுண்ணிடை கருப்பந் தாங்கினள். (௨௯)

முள்ள ரைச்செழு முளரி நாயக
னெள்ள ருங்குலத் திறைமை பூண்டவன்
பிள்ளை மென்சொலா ளுருவு பெற்றநாள்
வெள்கு முள்ளமோ டொத்த மேனியே. (௩௦)

பரிதி மத்துடு பதியும் பண்டைநூற்
சுருதி சொற்றநல் லறமுந் துள்ளவே
பொருபு னற்புவி புரக்கும் பொற்புயத்
தொருத னிச்சிறு வனையு யிர்த்தனள். (௩௧)

தாவி லாதறந் தழைப்பத் தோன்றிய
காவன் மைந்தனை வியந்து கண் ணுறீஇப்

பூவி னுன்முகன் புரூர வாவென
நாவி னுற்றிரு நாம நல்கினன். (௩௨)

புரசை வாரணப் புரூர வாநெடுங்
கரைசெய் வேலைசூ ழுலகு காவலர்
மரைசெ யாசையா லாசையாசற
வுரைசெய் நேமியுங் கோனு மோச்சினன். (௩௩)

மண்ட லீகர்தம் மகுடகோடிநாட்
புண்ட ரீகமேற் புனைந்து போற்றிட
வண்டர் வானமு மகல மில்லெனக்
கொண்ட தன்றனிக் குடைநி ழற்றுநாள். (௩௪)

ஒரு திருத்தம்.

சென்ற மார்கழிப்பகுதி (தொகுதி–20. பகுதி–2.) ௫௪ ஆம்பக்கத் திறுதியில் 'பழையவழக்கத்தை' என்று தொடங்கும் பத்தியைப் பின் வருமாறு படித்துக்கொள்ளவேண்டுகிறேன்.

பழையவழக்கத்தைத்தழுவிய தேசபாஷாபண்டிதர்களின்ராஜசம் மானத்தை அநுஷ்டானத்திற்கொண்டுவரமுயன்ற நம் சங்கத்தின் கௌரவகாரியதரிசி ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களுக்கும், அதற்கிசைந்து, தேசபாஷாபண்டிதர்களைக் கௌரவிக்கமுன்வந்த சென்னைச்சர்வகலாசங்கத்தலைவர்களுக்கும், தேசபாஷாபண்டிதர்களைத் தருவித்து அவர்கள் திறமையையும் பெருமையையும் கேட்டு மனமகிழ்ந்து தமது உலகோம்புந்தடக்கையால் அவர்களுக்குப் பரிசு வழங்கிய மேன்மைதங்கிய இளவரசர்க்கும் எல்லாநன்மையும் உண்டாக இறைவன் திருவருள் பாலிப்பானாக.

உதவிப்பத்திராதிபர்.

உ

வராஹமிஹிரர் இயற்றிய

பஞ்சசித்தாந்திகா.

[**520**-கி. பி.]

சாச-ஆம் பக்கத்தொடர்ச்சி

4-கரணாத்தியாயம்.

சில பரிபாஷைகள்.

வ்ருத்தம்=Circle.

பரிதி=Circumference.

வ்யாஸம்=Diameter (240 அங்.)

அரம்=Radius (120 ,,)

சாபம்=Arc.

ஜீவம்=Chord.

ஶரம்=Altitude of arc.

திரிஜ்யா=Arc of 90°, quadrant.

ஜ்யா=Sine.

கோஜ்யா=Cosine.

{ கர்ணம்=Hypotenuse of a rt. angled triangle.
{ கோடி=Perpendicular ,,
{ புஜம்=Base ,,

[த்ருவம்=Pole.]

{ த்ருவம்=Celastial longitude.
{ விக்ஷேபம்= ,, latitude.

{ அக்ஷம்=Latitude.
{ லம்பம்=Colatitude.

சங்கு }
கோல் } =Gnomon (12 அங்.)

அக்ரா=Amplitude.

க்ராந்தி=Declination.

க்ஷிதிஜம் }
உதரிஜம் } =அடிவானம், horizon.

குஜ்யா=earth sine.

அக்ஷஜ்யா=sine of latitude.

லம்பஜ்யா=sine of colatitude.

க்ராந்திஜ்யா ,, declination.

மத்யமண்டலம்=equatorial circle.

க்ராந்திமண்டலம்=sun's ecliplic or path.
ஸமமண்டலம்=prime vertical.
திங்மண்டலம்=திசைகுறிக்கும் வ்ருத்தம்.
தினமண்டலம்=Day circle. இஷ்டதினத்தில் சூரியன் செல்லும் வீதி.

தினவ்யாஸம்=Day Diameter.

நதாம்சம்=Zemith distance.

வ்யாஸம்	=240 அங்குலம்.	என்று இந்த ப்ரகரணத்திற் கணிக்கப்பட்டிருக்கிறது.
அரம்	=120 ,,	
சங்கு	= 12 ,,	

4/1 $$\text{வ்யாஸம்} = \sqrt{\left(\frac{\text{பரிதிவர்க்கம்}}{10}\right)} = \frac{\text{பரிதி}}{\sqrt{10}}$$

4/2 60° ஜீவம்=அரம் (Radius).

$$30^\circ\ \text{ஜ்யா} = \frac{\text{அரம்}}{2} = \frac{60^\circ\ \text{ஜீவம்}}{2}$$

$$\text{க}^\circ\ \text{ஜ்யா} = \frac{(\text{உக})^\circ\ \text{ஜீவம்}}{2}$$

$$\sqrt{\left\{\text{அரம்}^2 - (30^\circ\ \text{ஜ்யா})^2\right\}} = 60^\circ\ \text{ஜ்யா(sine)}.$$

4/3 20° ஜ்யா கணிக்கவேண்டுமானால்

$$\sqrt{\left\{\left(\frac{\text{அரம்} - (90^\circ - 2\times 20^\circ)\ \text{ஜ்யா}}{2}\right)^2 + \left(\frac{40^\circ\ \text{ஜ்யா}}{2}\right)^2\right\}} = 20^\circ\ \text{ஜ்யா}.$$

$$= \sqrt{\left\{\left(\frac{\text{அரம்} - 50^\circ\ \text{ஜ்யா}}{2}\right)^2 + \left(\frac{40^\circ\ \text{ஜ்யா}}{2}\right)^2\right\}} = 20^\circ\ \text{ஜ்யா}.$$

இவ்வாறே வேண்டிய சாப ஜ்யாக்களைக் கணிக்கவேண்டும்.

4/4. (1) $\text{அரம்}^2 - \text{ஜ்யா}^2 = \text{கோஜ்யா}^2.$

$\sqrt{(\text{அரம்}^2 - \text{ஜ்யா}^2)} = \text{கோஜ்யா}.$

(2) $\frac{\text{அரம்}^2}{2}$ = (45° ஜ்யா)²

$\sqrt{\frac{\text{அரம்}^2}{2}}$ = 45° ஜ்யா.

4/5. க எனும் சாப (arc) ஜ்யா கணிக்கும் விதம்.

(அரம்—(90° —2 க) ஜ்யா) 60=(க ஜ்யா)².

[இந்நூலில் அரம்=120 என்றே கணிப்பது முறை.]

க=30° என்று வைத்துக்கொள்வோம்.

(30° ஜ்யா)² = {120° —(90—60°) ஜ்யா} ×60.

= (120—30° ஜ்யா)×60.

= (120—60)×60.

= 60×60.

30° ஜ்யா = 60.

(6–15) சாபஜ்யா (Sine of arc) நிர்ணயம்.

(16–18) சந்த்ரவிக்ஷேப (latitudes) நிர்ணயம்.

4/=20—22 நிழலும் அக்ஷாம்ஸமும்.

முதன்முறை.

$\frac{\text{விஷுவப்பகல் நிழல்} \times \text{அரம்}}{\sqrt{(\text{விஷுவப்பகல் நிழல்}^2 + \text{சங்கு}^2)}}$ = ஸ்வதேச அக்ஷாம்ச ஜ்யா.

அவந்தியில் 12 அங்குல சங்குக்கு 6 அங். நிழல்.

அரம்=120 அங். அதன் வ்ருத்தம்.

$\therefore \frac{6 \times 120}{\sqrt{6^2+12^2}}$ = ஸ்வதேச அக்ஷாம்ச ஜ்யா.

2 ம்முறை—

இஷ்டதினப் பகல் நிழலைக்கொண்டே கணிப்பது.

$\frac{\text{பகல் நிழல்} \times \text{சங்கு}}{\text{சாயாகர்ணம்.}}$ = ஸ்வதேச அக்ஷாம்ஸஜ்யா.

சித்திரைமீ முதல்தேதி 12 அங்குல சங்குக்கு 6 அங்குல நிழல்.

$\frac{6 \times 12}{\sqrt{(\text{பகல் நிழல்}^2 + \text{கோல்}^2)}}$

$\frac{6 \times 12}{\sqrt{(6^2+12^2)}}$ = ஸ்வதேச அக்ஷாம்ச ஜ்யா.

ஷை ஜ்யாவைக்கொண்டு அதற்குத் தக்க சாபம் அறியலாம். அது தான் ஸ்வதேச அக்ஷாம்சம்.

$$\frac{\text{நதாம்ஶஜ்யா} \times 12}{\text{அரம்}^2 - \text{நதாம்ஶஜ்யா}^2} = \text{நிழல் நீளம்.}$$

நதாம்ஶம் (Zemith distance) என்பது, ஸூரிய விக்ஷேபத்து (latitude)க்கும் இஷ்டஸ்தான விக்ஷேபத்துக்குமுள்ள தென்வடல் தூரம்.

12 = சங்கு அளவு.

4/23 $\sqrt{(\text{அரம்}^2 - \text{அக்ஷஜ்யா}^2)} = \text{லம்பஜ்யா.}$

$2 \times \text{லம்பஜ்யா} = \text{தினவ்யாஸம்.}$

4/24-25 $\left\{ \begin{array}{l} \text{க்ராந்திஜ்யா} = \text{Sine of declination.} \\ \text{தினவ்யாஸம்} = \text{Day diameter.} \end{array} \right.$

	மேஷம்.	வ்ருஷபம்.	மிதுனம்.
க்ராந்திஜ்யா	$24\frac{2}{5}$	$42\frac{1}{4}$	$48\frac{2}{5}$
தினவ்யாஸம்	235	$222\frac{2}{5}$	$219\frac{1}{4}$

[அரம் = 120 என்று கணிக்கப்பட்டுள்ளது].

4/26 இஷ்டதேச சரகண்டம் (Ascensional) difference.

$$\frac{\text{அக்ஷஜ்யா} \times \text{க்ராந்திஜ்யா}}{\text{லம்பஜ்யா}} = \text{குஜ்யா (Earth sine).}$$

$$\frac{\text{குஜ்யா} \times \text{வ்யாஸம்}}{\text{தினவ்யாஸம்}} = \text{சரகண்டஜ்யா.}$$

$$\frac{\text{சரகண்டசாபகலைகள்}}{3} = \text{சரவிநாடிகள்.}$$

4/27-28 $$\frac{\frac{\text{சரகண்ட}}{2}\text{ஜ்யா} \times \text{தினவ்யாஸம்}}{240} = \text{குஜ்யா.}$$

$$\frac{\text{குஜ்யா} \times \text{அரம்}}{\sqrt{(\text{குஜ்யா}^2 + \text{க்ராந்திஜ்யா}^2)}} = \text{அக்ஷஜ்யா.}$$

$90^\circ - \text{அக்ஷஜ்யா} = \text{லம்பஜ்யா.}$

$\left\{ \begin{array}{ll} \text{வ்யாஸம்} & = 240 \text{ (Diameter)} \\ \text{அரம்} & = 120 \text{ (Radius)} \end{array} \right\}$

4/29. லங்காலக்னோதயம் = (நிரக்ஷஉதயம்)

$$= \frac{\sqrt{(\text{மேஷாதிலக்னஜ்யா}^2 - \text{க்ராந்திஜ்யா}^2)}}{\text{தை. சாப விநாடிகள். } (1^\circ = 10 \text{ விநா.})} \times \frac{\text{வ்யாஸம்}}{\text{தினவ்யாஸம்}}$$

விநாடி				
278	மே.	கன்.	து.	மீ.
299	வி.	சிம்.	வ்.	கு.
323	மி.	கட.	த.	ம.

4/31. ஸ்வதேசலக்னோதயநிர்ணயம்.

	மே.	விரு.	மி.	கட.	சிம்.	கன்னி.
லங்காலக்னோதயம்	278	299	323	323	299	278விநாடி
காசி சரகாலப்பாதி	—57	—46	—19	+19	+46	+57 ,,
காசிலக்னோதயம்	221	253	304	342	345	355 ,,
	மீ.	கும்.	ம.	த.	வ்ரி.	து.

இவ்வாறே மற்ற இடங்களுக்கும் அந்தந்தச் சரகாலத்தைக்கொண்டு கணிக்க வேண்டும்.

4/32–33. ஸமமண்டல (Prime vertical) ப்ரவேசம்.

$$\frac{\text{க்ராந்திஜ்யா}}{\text{அக்ஷஜ்யா}} \times 120 \text{ (அதாவது அரம்)}$$

இந்த ஜ்யா ஸம்பந்தமான சாபத்தை விஞடியாக்கிவருவதுதான், உதயத்துக்குப் பிறகு ஸூரியன் ஸமமண்டலப்ரவேசம்செய்யுங் காலம்.

தக்ஷிணகோளத்துக்கு இம்முறை பொருந்தாது.

4/34. அஹஸ்வ்ருத்தி.

$$\frac{\text{க்ராந்திஜ்யா} \times 240 \times \text{அக்ஷஜ்யா}}{\text{லம்பஜ்யா} \times \text{தினவ்யாஸம்}},$$

இந்த ஜ்யா ஸம்பந்தமான சாபத்தில் ஆறில் ஒருபங்கை விநாடியாக்கி வருவது அஹஸ்விருத்தியாகும்.

4/35. சங்குவிப்திகா = Sine of sun's altitude when it is on prime vertical.

$$\frac{\text{ரவித்ருவஜ்யா} \times \text{ஜினஜ்யா}}{\text{அக்ஷஜ்யா}} = \text{சங்குவிப்திகா (விநாடி)}$$

பரமக்ராந்தி
ஜினஜ்யா
காஷ்டாந்தம்
} = Sun's greatest declination.

4/38. ஸமமண்டல (Prime vertical) ப்ரவேசம்.

திங்மண்டலக் கிழமேல்வரையுடன் சங்கு நிழல்வரை சேருங்காலமே, ஸூரியன், ஸமமண்டலப்ரவேசகாலம்.

திங்மண்டலம் = திசைகள் குறிப்பிட்ட வ்ருத்தம்.

4/39. அக்ரா (Amplitude)

$$\frac{\text{அரம் x க்ராந்திஜ்யா}}{\text{லம்பஜ்யா}} = (\text{அக்ராஜ்யா})$$

அக்ரா என்பது, இஷ்டதினத்தில், உதயாஸ்தமன ஸமயத்தில், கிழமேல் வரைக்கப்பால் சூரியனிருக்கும் தூரம்.

4/40. $$\frac{\text{க்ராந்திஜ்யா} \times 120}{\text{அக்ராஜ்யா}} = \text{லம்பஜ்யா}.$$

90^0—லம்பசாபம்=பூ அக்ஷாம்சம்.

4/41-44. $$\text{த்ரிக்ஜ்யா} = \sqrt{(\text{அரம்}^2 - \text{சங்கு}^2)}$$
$$= \sqrt{(14400 - 144)}$$
$$= \sqrt{14256}$$

$$\text{சங்குநிழல்} = \frac{\text{த்ரிக்ஜ்யா} \times 12}{\text{சங்குஜ்யா}}$$

4/45-47 $$\frac{\text{நேரம்}}{\text{ஹ்ருதி}} = \text{ப்ரதமஜ்யா}$$

$$\text{ப்ரதமஜ்யா} = \frac{12 \times 120^2}{\sqrt{(\text{நிழல்}^2 \times 12^2)} \times \text{லம்பஜ்யா}}$$

$$\text{குஜ்யா} = \frac{\text{அக்ஷஜ்யா} \times \text{க்ராந்திஜ்யா}}{\text{லம்பஜ்யா}}$$

வடகோளத்தில் ப்ரதமஜ்யா—குஜ்யா (x)

தென் ,, ,, + ,, (y)

I: $\frac{x \times 240}{\text{தினவ்யாஸம்}}$; II: $\frac{y \times 240}{\text{தினவ்யாஸம்}}$ ஷை சாபங்கள்.

உத்தரக்ராந்தியில் I+II, தக்ஷிணக்ராந்தியில் I—II இதனுல் வருவதை 6-ல் வகுத்து வரும் விநாடிகள் நேரத்தைக்காட்டும்,

4/48. நேரம் (2-ம் முறை).

$$\text{நேரநாழிகை} = \frac{2 \times \frac{\text{அஹர்மானம்}}{2}}{12 + \text{நிழல் மத்யான்ன நிழல்}}$$

$$= \frac{6 \times \text{அஹர்மானம்}}{12 + \text{நிழல்} - \text{மத்யாஹ்ந நிழல்}}$$

இது முற்பகலில் சென்ற நாழிகை; பிற்பகலில் பாக்கி நாழிகை.

4/49. இஷ்ட நேர நிழல்.

$$\frac{6 \times \text{அஹர்மானம்}}{\text{நாழிகை}} - 12 + \text{மத்யான்னநிழல்} = \text{நிழல்}$$

4/50. சந்த்ர நிழல் நிர்ணயம்.

4/52-56. ஸூர்யாக்ரா (Sun's amplitude)

$$= \frac{\text{அக்ஷஜ்யா} \times \text{பரமக்ராந்திஜ்யா}}{\text{லம்பஜ்யா}}$$

ஸூர்யத்ருவம் (Sun's longitude)

$$= \frac{\text{அக்ரஜ்யா} \times \text{லம்பஜ்யா}}{\text{பரமக்ராந்திஜ்யா}}$$

பரமக்ராந்தி = Suns greatest declination.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B.A., B.L.,
மதுரை.

௨

ஔவையார் அருளிச்செய்த

அசதிக்கோவை.

குறிப்பு :—அடியில்வரும் ஒன்பதுசெய்யுள்களும், காஞ்சீபுரம்-மாத்தரு பூதையரவர்களியற்றிய நந்தமண்டலசதகத்தினுரையாசிரியர் ப. திருவேங்கடம் பிள்ளையவர்களால் உரைமுடிவிற் காட்டப்பெற்றிருப்பவை. அருமையான அசதிக்கோவைச்செய்யுளி னினிமையைச் செந்தமிழறிஞர் அடையும்படி இப் பத்திரிகைவாயிலாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

1. அற்றாங் கியகரத் தைவே லசதி யணிவரைமேன்
முற்றா முகிழ்முலை யெவ்வாறு சென்றனண் முத்தமிழ்நூல்
கற்றார் பிரிவுங்கல் லாதவ ரிட்டமுங் கைப்பொருள்க
ளற்றா ரிளமையும் போலே கொதிக்கு மருஞ்சுரமே.

2. அருஞ்சஞ் சலங்கொண்ட வைவே லசதி யகல்வரையி
னிருஞ்சஞ் சலஞ்சொல்ல வேண்டுங்கொ லோவென தன்னைமொழி
தருஞ்சஞ் சலமுந் தனிவைத்துப் போனவர் சஞ்சலமும்
பெருஞ்சஞ் சலங்கொண்டு யானிருந் தேனொரு பெண்பிறந்தே.

3. அலைகொண்ட வேற்கரத் தைவே லசதி யணிவரைமே
னிலைகொண்ட மங்கைதன் கொங்கைக்குத் தோற்றிள நீரிணங்கள்
குலையுண் டிடியுண்டென் கையினி லெற்றுண்டு குட்டுமுண்டு
விலையுண் டடியுண்டு கண்ணீர் ததும்பவும் வெட்டுண்டவே.

4. அழற்கட்டு கட்டிய வைவே லசதி யணிவரையின்
மழைக்கட்டு கட்டிய மாளிகை மேலொரு மங்கைநல்லா
ளுழக்கிட் டரியிட்டு முவ்வுழக் கிட்டரி நாழியிட்டுக்
குழற்கட் டவிழ்த்துட னங்ஙனின் றேமயிர் கோதினளே.

5. அறங்காட் டியகரத் தைவே லசதி யகன்சிலம்பி
னிறங்காட்டுங் கஞ்சத் திருவனை யீர்முக நீண்டகுமிழ்த்
திறங்காட்டும் வேலுஞ் சிலையுங்கொல் யானையுந் தேருங்கொண்டு
புறங்காட்ட வுந்தகு மோசிலைக் காமன்றன் பூசலிலே.

6. ஆலவட் டப்பிறை யைவே லசதி யணிவரைமே
னீலவட் டக்கண்க ணேரொக்கும் போதந்த நேரிழையாண்
மாலைவிட் டுச்சுற்றி வட்டமிட் டோடி வரவழைத்து
வேலைவிட் டுக்குத்தி வெட்டுவ ளாகில் விலக்கரிதே.

7. ஆரா யிரங்கொண்ட வைவே லசதி யகன்கிரியி
னீராடப் போகு நெறிதனி யேயந்தி நேரத்திலே
சீரான குங்குமக் கொங்கையைக் காட்டிச் சிரித்தொருபெண்
போராள் பிடிபிடி யென்றே நியாயம் புறப்பட்டதே.

8. ஆய்ப்பாடி யாயர்த மைவே லசதி யணிவரையிற்
கோப்பா மிவளெழிற் கொங்கைக்குத் தோற்றிபக் கோடிரண்டுஞ்
சிப்பாய்ச் சிறுக்கரி யாய்ச்சிமி ழாய்ச்சின்ன மோதிரமாய்க்
காப்பாய்ச் சதுரங்க மாய்ப்பல்லக் காகிக் கடைப்பட்டவே.

9. ஆடுங் கடைமணி யைவே லசதி யணிவரைமே
னீடுங் கயற்கண்ணி யாடந்த வாசை நிகழ்த்தரிதாற்
கோடுங் குவடுங் குளத்தரு கேநிற்குங் குன்றுகளுங்
காடுஞ் செடியு மவளாகத் தோன்றுமென் கண்களுக்கே.

பு. சிதம்பரபுன்னைவனநாதன்,
தமிழ்த்தொண்டன்.

அல்குல்.

செந்தமிழ் 19-ம் தொகுதி 6-ம் பகுதியில் திருவனந்தபுரம் ஸ்ரீமாந் N. சிவராஜபிள்ளையவர்கள் "நமது காவியங்களிற் சந்மார்க்கநாசத்திற் கேதுவான கதைகளும் வருணனைகளும் மலிந்துகிடக்கின்றன." என்னும் பகுதியில் 'சைவசமய ஆசாரியர்களின் தலைவரான ஞானசம்பந்தருங் கூடப் பாண்டிமாதேவியை வருணிக்குமிடத்து, "பைபாவ———— பாண்டிமாதேவி" என்றுகூறி நம்மைப் பிரமிக்கச்செய்கின்றார்' என்று எழுதியிருக்கிறார்கள். காலஞ்சென்ற ஸ்ரீமாந்-சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களும் இவர்களைப் போன்றே கருதித் தாம் பிரசுரித்த கலித் தொகையில் அச்சொல் வருமிடங்களிலெல்லாம் அதனை நீக்கி வேறு சொற்களையேனும் சொற்றொடர்களையேனும் பெய்தார்கள். அன்றியும், அவர்கள் அச்சொல்லைக் கூறும்பொழுது குஃறொடர்ந்த அன்மொழி யென்று பிரயோகித்தார்கள்.

சொற்பொருளுணர்த்தும் தமிழ்நூல்கள் திவாகரம் நிகண்டு முதலியனவேயாம். அவைகளில் திவாகரத்திலும் சூடாமணிநிகண்டிலும் அல்குற்பதத்திற்குப் பிரதிபதமாகக் கடிதடம், நிதம்பம் என்றிரண்டு சொற்கள் காணப்படுகின்றன. உரிச்சொல் நிகண்டில் அல்குலின் பரியாயப்பெயர்களாக அரை நிதம்பம் என்னும் இரண்டுமே காணப்படுகின்றன. பிங்கலந்தையில் மேற்கூறியவற்றோடு உபத்தமுங் கூறப்பட்டிருக்கின்றது. இவைகளில் அல்குற்கும் ஜனனேந்திரியத்திற்கும் காணப்படும் பரியாய பதங்கள் வெவ்வேறும்.

இனி, பெண்களது அவயவங்களை வருணிக்கப் புகுவார்க்கு அவற்றிற்குரிய உவமைகளைக் கூறுவதாய்ப் புகழேந்திப் புலவராற் செய்யப்பட்டிருக்கும் 'உவமானசங்கிரகம்' என்னும் நூலிலும், மதுரைத் தமிழ்ச் சங்கத்து 36வது பிரசுரமாக வெளிவந்திருக்கும்' உவமானசங்கிரகம்' என்னும் நூலிலும் அல்குற்கும் ஜனனேந்திரியத்திற்கும் வேறுவேறு உவமைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

அல்குலின் பரியாயப் பெயராகிய கடிதடம் என்பது கடி, தடம் என்பன சேர்ந்தாகியது. தடம் என்பது சரிவுப்பக்கங்களையுடைய அவயவங்களைக் குறிப்பதற்குவரும் சொல்லாம். கடி என்பது பிருஷ்டத்தின் பெயராக வடமொழியிற் காணப்படுகிறது. ஆகவே கடிதடம் என்

னுஞ்சொல் இடுப்புக்குக்கீழுள்ள பின்பாகத்தைக் குறிக்கும். (கடிசூத்திரம் என்பனவற்றிற்போலக் கடி தனித்து நின்று இடுப்பையுணர்த்துவதுமுண்டு). கலித்தொகையில் "மூவழிப்பெருகி" என வருதலினுலும் அல்குல் இடுப்பின் கீழுள்ள பின்பாகத்தையே குறிக்குமென்பது பெறப்படும். நிதம்பம் என்னுஞ் சொல்லுக்கு அமரகோசம் பெண்களின் இடுப்புக்குக்கீழ்ப்பட்ட பின்பாகம் என்னும் பொருளைத் தருகின்றது. பச்சாத் நிதம்ப: II மனுஷ்ய வர்க்கம் 74. ஆப்டி என்பவரும் அச்சொற்கு இடுப்பும் அதன் பின்புறமும் என்றே பொருள் கொள்ளுகின்றார்.

நமது சிவராஜபிள்ளையவர்களால், பாராட்டப்படுகிற கம்பராமாயணத்தில் ராமபிரான் அநுமானைச் சீதையை நாட அனுப்பும்பொழுது அநுமான் சீதை இவள் என்று ஐயந்திரிபற அறிவதற்கு அநுகுணமாக அவளது அவயவங்களை வருணித்துக்கூறுமிடத்து அல்குலுங் கூறப்பட்டிருக்கின்றது. அல்குல், கடிதடம் என்னும் பதங்கள் ஆண்மக்களை வருணிக்குமிடத்தும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. "பூந்துகில் சேரல்குல் காமரெழில் விழவுடுத்து" எனத் தசரதன் ராமனை நோக்கிப் புலம்புவதாகக் குலசேகராழ்வார் கூறுகின்றார். தவநிலையில் நின்ற அருச்சுனனும் வேடவடிவங்கொண்டுவந்த சிவபெருமானும் மற்போர் செய்கின்றகாலத்தில் கடிதடத்தாலும் மற்போற் செய்தாரென்று வில்லிபுத்தூரர் கூறுகின்றார்.

உபத்தம் என்பது சமீபத்திலிருப்பது என்னும் பொருளைத்தரும் அல்குற் பதம் தமிழ்நூல்களிற் சிலவிடங்களில் இடக்காடக்கலாக உபயோகிக்கப்படுவதுண்டு. அதுபோல வடசொற்களுள் உபத்தமும் உபயோகிக்கப்படும். இவ்வுபத்த மென்னுஞ் சொல்லும் இருபாலார் அவயவங்களுக்கும் பொதுவாக உபயோகிக்கப்படுதல் சமயநூல்களிற் காணப்படுகின்றது.

ஒரு சொல்லின் செம்பொருளுக்கும் இடக்காடக்கற்பொருளுக்கும் வேற்றுமைதெரிந்துகொள்ளுவது உண்மைப்பொருள்தெரிவார்கடனும். ஒரு சொல் உவமைதொடர்ந்துவருவதே அச்சொல் இடக்காடக்கலன்றென்பதை நாம் சிறிதும் பிரமித்தற்கிடமின்றித்தெளிவுபெறக்குறிக்கும்

ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை,

பேட்டை.

மதுரைத்தமிழ்ச்சங்கம்.

தனித்தமிழ்ப்பரீக்ஷைவினா.

பிரவேசபண்டிதவகுப்பு.

பரீக்ஷகர் :—ஆ. கார்மேகக்கோனார்.

இலக்கணம் II.

ரௌத்திரிஸு பங்குனிமீ 22உ (4-4-21) திங்கட்கிழமை 2—5.

(அம்சம் 60.)

I. 1. யாப்பருங்கலநூலாசிரியரும் யாப்பருங்கலக்காரிகைநூலாசிரியரும் ஒருவரேயென்பது எவ்வாதாரத்தாற் றெளிவுறுகின்றது?

2. தொல்காப்பியத்துள், பாக்களின் இலக்கணம் விரித்துரைத்திருப்பவும் யாப்பருங்கலம் யாப்பருங்கலக்காரிகைபோன்ற நூல்கள் எழுந்தது எற்றிற்கு?

3. பழைய ஆசிரியருள் யாப்புச்செய்தோரெனக் காரிகையுரையிற் காட்டப்பட்ட ஆசிரியர் யார் யார்?

4. யாப்பருங்கலக்காரிகையென்பது நூலை எவ்வாற்றா னுணர்த்தும்?

5. நேரீற்றுப்பொதுச்சீர்நின்று தன்வருஞ்சீர் முதலசையோடொன்றுவது என்ன தளையாகும்? ஒன்றாதது என்ன தளையாகும்?

6. (a) "வானகச்சோலை வரையதரெம்முள்ளிவருதிராயின்
யானைகண்டார்க்குமரியேறு நும்மஞ்சியகன்றுபோக
யானையோநுங்கைவேலஞ்சுகநும்மை
வானரமகளிர்வெளவுதலஞ்சுதும்வாரலையோ"

(b) "செல்வப்போர்க்கதக்கண்ணன்செயிர்த்தெறிந்தசினவாழி
முல்லைத்தார்மறமன்னர்முடித்தலையைமுருக்கிப்போய்
எல்லைநீர்வியன்கொண்மூவிடைநுழையுமதியம்போல்
மல்லலோங்கெழில்யானைமருமம்பாய்ந்தொளித்ததே"
இவைகள் என்ன பாக்கள்?

II. 1. அடிதோறும் தனிச்சொற்பெற்றுவந்த இன்னிசைவெண்பாவிற்கும் ஐந்தடியான்வந்த ஒருவிகற்பப்பஃறொடைவெண்பாவிற்கும் சவலைவெண்பாவிற்கும் ஒவ்வோருதாரணந் தருக.

2. கொச்சகக்கலிப்பா எத்தனைவகைப்படும்? எவ்வாறு வரும்?

3. மருட்பாவென்றுலென்ன? அஃது எவ்வெப்பொருளில்வரும்?

4. வஞ்சிப்பாவின் இலக்கணம் என்ன?

5. மோனை எத்தனை வகைப்படும்? உதாரணந் தருக.

6. செப்பலோசை, தூங்கலோசை, துள்ளலோசை, அகவலோசை என்றுலென்ன? இவைகள் எவ்வெப் பாக்களுக் குரியன?

III. 1. தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம் என்ற கலிப்பாவுறுப்புக்களின் பரியாயநாமங்களையும் அப்பெயர்க்காரணங்களையும் எழுதுக?

2. " மாஞ்சீர்கலியுட்புகாகலிப்பாவில்விளங்கனிவந்
தாஞ்சீரடையாவகவலகத்துமல்லாதவெல்லாந்
தாஞ்சீர்மயங்குந்தளையுமதேவெள்ளைத்தன்மைகுன்றிப்
போஞ்சீர்கனிபுகிற்புல்லாதயற்றளைபூங்கொடியே"
இக் காரிகையின்பொருளை விரித்துரைக்க.

3. தமிழிலுள்ள அலங்காரநூல்கள் வேறு யாவை?

4. செறிவு தெளிவு சமநிலை இவற்றை விளக்குக.

5. திவகவணி எத்தனைவகைப்படும்?

6. வேற்றுப்பொருள்வைப்பு, தற்குறிப்பேற்றம், ஒப்புமைக்கூட்டம் இவ்வணிகளின் இலக்கணத்தை விளக்குக.

IV. 1. (a) தாதளவிவண்டுதடுமாறுந்தாமரைகொல்
மாதர்விழியுலவுமொண்முகங்கொல்—யாதென்
றிருபாற்கவர்வுற்றிடையூசலாடி
ஒருபாற்படாதுளம்.

(b) சரியும்புனைசங்குந்தண்டளிர்போன்மேனி
வரியுந்தனைதடக்குழ்வம்பும்—திருமான
ஆகந்தழுவுசடங்கோளகளங்கள்
சோரந்தொழுதகொடிக்கு.
இச் செய்யுள்களிலுள்ள அணிகளை விளக்குக.

2. உவமானுேபமேயங்களில் யாதேனுமொன்றை விசேடமுடைத்தாகச்சொல்லுதலும், ஒரு கர்த்தாவைச்சேர்ந்த முறையுள்ள பல செய்கைகளை முறைபிறழாமற் சொல்லுதலும் காரியத்தை யதன் காரணத்தோடொத்ததாகச் சொல்லுதலும் என்ன அணிகளாகும்?

3. விபாவனுலங்காரம், விரோதாபாசாலங்காரம், வியாஜநிந்தாலங்காரம், அர்த்தாந்தரநியாசாலங்காரம், வியாகாதாலங்காரம் இவற்றின் தமிழ்ப்பெயர்களைக் குறிக்க.

4. சித்திரகவி எத்தனைவகைப்படும்? சித்திரகவிகள் சங்கத்தார் நூல்களிற்பயிலாது பிற்காலத்துநூல்களிற் காணப்படுவதற்குக் காரணம் யாது?

5. பெருங்காப்பியத்தின் இலக்கணம் யாது? காப்பியங்களில் வரலாகா வழுக்கள் யாவை?

6. எழுத்துவருத்தனத்தை உதாரணத்தோடு விளக்குக.

உ

புத்தக மதிப்புரை.

1. சுலோசனை:—இது, இராமாயணத்துள்ள கிளைக்கதைகளுளொன்ருக இந்திரஜித்தின் மனைவியாகிய சுலோசனை யென்பாள் பெயரால் அவள் கற்புடைமைதோன்ற அமரிடைமடிந்த கணவனைத்தழுவி அருந்தழல்புகுந்ததை விஷயமாகக்கொண்டு, இராமேசுவர தேவஸ்தான ஸம்ஸ்கிருத வித்யாசாலையின் தலைமையாசிரியரும், வித்யாநிதியென்ற சிறப்புப் பெற்றவரும் 'ஸஹ்ருதயா' என்னும் அரிய வடமொழிப் பத்திரிகையின் ஆசிரியருமாகிய ஸ்ரீமத் ர. கிருஷ்ணமாசாரியர் M. A. அவர்களால் 'ஸஹ்ருதயா' வில் வடமொழிவடிவாய் எழுதிவெளியிட்டதொரு சிறியகதை. இதனை வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்ல மகிபாலன்பட்டி வித்வான் ஸ்ரீ-மத். மு. கதிரேசச்செட்டியார் அவர்கள், மேலைச்சிவபுரிச்சன்மார்க்கசபையார் வேண்டுகோட்கிணங்கிச் சிறந்த தமிழ்நடையில் மொழிபெயர்த்து அச்சிட்டிருக்கிருர்கள். விஷயங்கள் வடமொழியிலுள்ளவையேயாயினும், மொழிபெயர்ப்பிற் சுவை குன்றுதற்குரிய வழிநடையெனத் தோன்றுவண்ணம் சுவை மிகவுடைய

தலைநடையான தமிழ்நடையென்றெண்ணும்வகை மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. ஆண் பெண்மக்களாமிருபால் மாணவரும் பயிலற் குரியது. இவ்வாறு இன்னும் பல வடமொழிக்கதைகளைத் தமிழ்நடை யிலெழுதித் தமிழுலகுக்குபகரிக்கத்தகுதிவாய்ந்த இவர்களது உபய பாஷாபாண்டித்யம் பாராட்டத்தக்கது. இதனவிலை அணா மூன்று. வேண்டுவோர் மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபையார்க்கெழுதிப் பெறலாம்.

2. தனிப்பாக்கோவை:—இது, இப்போது இராமநாதபுரம் ஜில்லா பெண்பாடசாலை உதவிப்பரிசோதகராயிருப்பவரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவருமான ஸ்ரீ மத். வே. முத்து ஸாமி ஐயர், M. A. L. T. அவர்களால் அவ்வப்பொழுது தம் மனத்தில் தோன்றிய கருத்துக்களையமைத்துச்செய்திருக்கும தனிப்பாக் களாற்றெகுக்கப்பட்டது. இதில் தோத்திரப்பாடல்களும் வாழ்த்துப் பாடல்களும் இரங்கற்பாடல்களும் வேறு பலவகைப்பாடல்களும் உள் ளன. இவற்றுள் ஐயரவர்கள் சென்று தரிசனம்செய்த பலபுண்ணிய ஸ்தலங்களும், சென்றிருந்து பிரஸங்கம்புரிந்த சங்கங்களும், அவர்களால் நன்குமதிக்கப்பெற்ற பல கனவான்களுடைய பெருந்தகை மையும் பிறவும் அறியலாம். இது, இக்காலத்தவர்களது சரித்திரத்தை ஆராய்ந்தெழுதமுயலும் பிற்காலத்தவர்களுக்கு மிகவும் பயன்படத் தக்கது. இதனவிலை அணா 8. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

3. ஸ்தோத்ரகாவ்யஸங்க்ரஹம்:—இதில் ப்ரஸந்நநாராயணம், உமாநாயிநாயகீஸ்தோத்ரம், ஸஹ்யஜாவிம்ஶதி, ஸாம்ப ஶிவநாமஸ்வாதநாராயிகாஸ்தோத்ரம், கருணாஷ்டகம், ஸ்ரீகுஹவா ராணாநடேஸ்வரி ஸ்ரீஸாம்பஶிவநாயாஷ்டோத்தரஶதம், ஶ்ரீஹரு ஷ்டஸ்தோத்ரஶதம் என்னும் ஏழுபிரபந்தங்கள் அடங்கியுள்ளன. இவை, திருவிக்கனூர் வித்வான் ஸ்ரீமத் ஸோமாவாயபட்டரால் அநுஸந்தா னம் பண்ணுவார்க்கு அர்த்தஸ்புரணமுண்டாகும்படி ஸரளமான ஸம்ஸ்க்ருதபத்யரூபமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றுள், ஸாகேத்தவனாதாஷ்டோத்தரஶத நாமங்களையெல்லாம் ஸாம்பஶிவ ஷ்டீவர்ணமாகவும் மஹாலக்ஷ்மீஸ்தோத்ரஶத நாமங்களையெல்லாம் அகராதி

யாகவும் அமைத்திருப்பது பாராட்டத்தக்கது. இதன்விலை அணா-5. வேண்டுவோர், நம்மங்குறிச்சி ரெங்காசாரியர், வடக்குவீதி, திருவழுந்தூர், மாயவரம் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

4. ஸ்ரீகாளிதாஸர்:—வடமொழிப்புலமைவாய்ந்த தெய்வகவியாய் விளங்கிய காளிதாஸரை அறியாதவர் வெகுசிலரேயாவர். அவரியற்றிய காவியங்களும் நாடகங்களும பல. அவை சொற்பொலிவும் பொருட்பொலிவும் அலங்காரமும் மிக உடையன. அவற்றின் திட்ப நுட்பங்களையும் பிறநலன்களையும் தமிழுலகமும் அறிந்து இன்புறற்பொருட்டுக் கும்பகோணம் கோமளவல்லிபுத்தகசாலையார், காளிதாஸர் என்ற பெயருடன் ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையை நடத்திவருகிறார்கள். அதன் முதற்பகுதியிற் காளிதாஸரியற்றிய நாடகங்களுள்ளும் காவியங்களுள்ளும் தலைசிறந்தனவாகிய மாளவிகாக்கினிமித்திரமும குமாரசம்பவமும் தெளிவான தமிழ்நடையில் விளக்கமான குறிப்புரையுடன் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன. இவற்றை மொழிபெயர்த்துதவியவர் கும்பகோணம் ராஜாங்கக்கலாசாலை ஸமஸ்கிருத பண்டிதர் ஸ்ரீ. உ. வே. ரா. வே. கிருஷ்ணமாசாரியஸ்வாமியாவர் மொழிபெயர்ப்பும் குறிப்பும் கவிசருக்தை நன்கு விளக்குவனவாயுள்ளன. இப்பத்திரிகை மாதந்தோறும் 40 பக்கங்கொண்டதாய் வெளிவரும். இதன் வருடச்சந்தா ரூபா மூன்று. வேண்டுவோர் மானேஜர், கோமளவல்லி புத்தகசாலை, 21. பாட்டாசாரியர் தெரு, கும்பகோணம் என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

5. ஸ்ரீ ராமாயணம்:— இது, இராமசரிதையைப் பாலகாண்ட முதல் யத்தகாண்டம்வரை எளிய சிறுசிறு வாக்கியங்களாம் சுருங்க உரைப்பது; கும்பகோணம் இராஜாங்கர்கலாசாலை ஸம்ஸ்கிருத பண்டிதர் ஸ்ரீ. உ. வே. ரா. வே. கிருஷ்ணமாசார்யரின் புத்திரி சௌ. அரங்கநாயகியால் எழுதப்பட்டது. உரைநடை பயிலத்தொடங்கும் சிறுவர்க்குபயோகமாகத்தக்கது. இதன்விலை ரூ 0—8—0. வேண்டுவோர் மானேஜர், கோமளவல்லி புத்தகசாலை, 21. பாட்டாச்சாரியர் தெரு, கும்பகோணம் என்ற விலாசதார்க்கு எழுதிப்பெறலாம்.

6. குலசேகரன்:—இது, P. M. வேணுகோபால நாயுடு அவர்களால் எழுதிவெளியிடப்பட்ட நவீனகதைப்புத்தகங்களுள் ஒன்று; பல

நீதிகளைப்புகட்டுவது; செவ்வியநடையிற் றிருத்தமாய் அச்சிடப்பட்டது. இந்நூலாசிரியர் வேறு சிலபுத்தகங்களும் வெளியிட்டுள்ளார். அவை சம்பகமாலினி, சரசுவதியந்தாதியுரை என்பனவாம். வேண்டுவோர், ஆம்பூர் எலிமெண்டரி ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ P. M. வேணு கோபாலநாயுடு அவர்களுக்கு எழுதிப்பெறலாம்.

7. முப்பொருளுறவு:—இது, சென்னை 'நியூ ரிபார்மர்' என்ற பத்திரிகையின ஆசிரியர் ஸ்ரீமத் D. கோபாலசெட்டியாரால் எழுதப்பட்டது. இதன்விலை ரூ 0-8-0. வேண்டுவோர், அறக்கோணத்திலிருக்கும் 'நியூரிபார்மர்' பத்திராதிபர் D. கோபாலசெட்டியாரவர்களுக்கு எழுதிப்பெறலாம்.

8. சாவித்திரி நாடகம்:—இது, ஸ்ரீமத் தியாகராஜஐயா அவர்களால் இயற்றப்பட்டது. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்

9. ஆனந்தசாகரம்:— இப்பெயருடன் ஒருமாதாந்தப்பத்திரிகை நாளிது தர்மதி௵ சித்திரைமாதமுதல் கொழும்பில்நடந்துவருகிறது. இதில் நீதிகளும், சிறு கதைகளும், விநோதச்செய்யுட்களும் முதலிய பல விஷயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. வேண்டுவோர், மானேஜர், "ஆநந்த சாகரம்," 63 ஜிந்தும்பட்டித்தெரு, கொழும்பு என்ற விலாசதார்க்கு எழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

உ

இராமோதந்தம்.

இது,

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்

அ. குமாரசுவாமிப்பிள்ளை

மொழிபெயர்த்து

இயற்றியது.

செந்தமிழ்ப்பிரசுரம்—௯௬.

மதுரைத்தமிழ்ச்சங்க முத்திராசாலையிற்

பதிக்கப்பெற்றது.

1922.

இதன்விலை அணா 3.

உபநியாசம்.

இராமபிரானுடையசரித்திரத்தை இனிதுபாராட்டிக்கூறும்நூல்கள் எத்தனையோபலவாகும். வடமொழியிலே வான்மீகராமாயணம், அத்தியாத்துமராமாயணம், போதாயனராமாயணம், பட்டிகாவியம், போசசம்பு, இரகுவமிசம் முதலிய பெருநூல்களிலும், இராமோதந்தம், பாலராமாயணம் முதலிய சிறுநூல்களிலும், தென்மொழியிலே கம்பராமாயணம், கூர்மபுராணம், இராமாயணக்கருப்பொருள், இராமாயணவெண்பா முதலிய நூல்களிலும் பெருக்கமுஞ் சுருக்கமுமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இராமசரிதத்தைப் பராமுகமின்றிப் படிப்பாரும் பலராவர்; கேட்பாரும் பலராவர்.

இவையெல்லாவற்றுள்ளும் இராமோதந்தம் என்னும் இந்நூல் இலகுவுஞ் சுருக்கமும் இயைந்து வடமொழி பயிலும் மாணவர்களாற் பெரும்பாலும் முதற்பாடமாகக்கொண்டு படிக்கப்பட்டுவருகின்றது. இராமோதந்தம் என்பது இராமனுடையசரித்திரம் எனப் பொருள்படும். இராம+உதந்தம்=இராமோதந்தம். இராமனுவான் புருடலக்கணமெல்லாம் பூரணமாய்நிறைந்து சகலசற்குணமும்வாய்ந்து தசரதசக்கரவர்த்தியிடம் அவதரித்த ஓரவதாரபுருடன். உதந்தம்—சரித்திரம்.

இதனைச் செந்தமிழ்நூல்படிக்குஞ்சிறுவர்களுக்கும் பயன்படும்படி மொழிபெயர்த்துச் செய்யுள்வடிவாகச்செய்யவேண்டும் என்று செந்தமிழ் நூல்களை நன்குபயின்ற பண்டிதர்சிலர் விரும்பினர். அவர் விரும்பியபடியே யாமும் மொழிபெயர்த்துப் பெரும்பாலும் விருத்தப்பாவிலே அமைத்து முடித்தாம். சில கதைகள் கம்பராமாயணத்துக்கு மாறாய் வருதலு முண்டு. சில சொன்மாலையின்பாகங்கள் செய்யுட்டொடை நோக்கி, வாளாவிடப்பட்டும் இருக்கின்றன.

அங்கிலமொழியிற்சென்ற ஆதுனிகர்சிலர் நூல்கள் செய்யுள் வடிவமாகச்செய்யப்படுதல் நன்றன்று என்றும், திரிசொற்களைவிலக்கிச் செஞ்சொற்களைச் சேர்த்து வாக்கியவடிவமாகச்செய்து முடித்தல் நல்லது என்றும் சொல்லுகின்றனர். செய்யுள்வடிவமும் வாக்கியவடிவமும் நோக்குங்கால் வெவ்வேறாகுமா? செய்யுளிலே சிலஇடங்களிலே மோனை, எதுகை முதலியனவும், பிறவும் நோக்கி அடைமொழிகள் சேர்க்கப்பட்டிருக்கும். அவைகளை நீக்கி நோக்கும்போது தோன்றுவது வாக்கியமல்லவா? செய்யுள்போல வாக்கியவடிவமும் நினைவிலே நெடுங்காலம் நிலைபெறுமா? படிக்குந்தோறுஞ் சுவைபயப்பது யாது? செய்யுள் வடிவமேயாம்.

சுன்னாகம்
துன்மதிவரு
தைமீ

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

௨

காண்டவகை.

பாலகாண்டம்.

அயோத்தியாகாண்டம்.

ஆரணியகாண்டம்.

கிட்கிந்தாகாண்டம்.

சுந்தரகாண்டம்.

யுத்தகாண்டம்.

உத்தரகாண்டம்.

உ

இராமோதந்தம்.*

விநாயகவணக்கம்.

பூவின் மேம்படு வன்மிக முனிவரன் புகன்ற
காவி யந்தனைச் சுருக்கிய கட்டுரை யிராமன்
மேவு † தந்தநற் றமிழினிற் கவிதையாய் விளம்பத்
தேவ ளைங்கரன் கரிமுகன் சேவடி பணிவாம்.

பாலகாண்டம்.

1 உலக மேத்திய விச்சிர வசுவென வோதுந்
தலைமை சேர்முனி தந்திடுஞ் சிறுவர்க ளாகிக்
குலவி ராவணன் கும்பகன் னன்பெருங் குணஞ்சேர்
தலைவன் வீடணன் மூவரும் விளங்கினர் தலைநாள்.

2 ஆய மூவரும் பலபக லருந்தவ மாற்றிச்
சேய தாமரைக் கிழவனை முன்வரச் செய்து
நேய மேவிய வரமெலாம் நினைவினிற் பெற்றார்
தூய மாதவஞ் செய்தவர்க் கரியதென் சொல்லின்.

3 கூறு மாநுட ரொழிந்தவெவ் வுயிர்களுங் கொல்லா
தேறும் வாழ்க்கையைத் தருகென விராவணன் கேட்டான்
நாறும் பைந்துழாய் முடியவ னடிமலர் நண்ணி
வீறு மன்பினைத் தருகென வீடணன் கேட்டான்.

4 தேவ ரின்மையைக் கேட்டிடச் சிந்தனை செய்தும்
நாவின் மேவிய மொழிதடு மாறலை நண்ணிப்
பாவி கும்பகன் னன்றுயில் கேட்டனன் படைப்போன்
யாவுங் கேட்டன கொடுத்தவண் மறைந்தன னிமைப்பில்

---

* இதன் உரிமை (copy right) ஆக்கியோர்க்குரியது.

† உதந்தம்—சரித்திரம்.

5 எங்கு லத்தவர்க் குரியதென் னிலங்கையைக் குபேரன்
இங்கு வந்தா சாள்வதென் னேவென விகலிப்
பொங்கி ராவணன் படையொடும் போரிடைப் புகுந்து
சிங்க வேறெனத் தாக்கினன் குபேரனைச் செறுத்து.

6 செறுத்து வென்றபின் புட்பக விமானமுந் திறலாற்
பறித்தி லங்கைமா நகரையுந் தன்னடிப் படுத்தி
வெறுத்து நொந்திட விண்ணவர் முனிவரர்க் கின்னல்
உறுத்தி வைகின னிலங்கையி லரசிய லுஞற்றி.

7 தெரியுஞ் சிற்பநூல் வல்லவன் செய்தொழின் மனத்தாற்
புரியுஞ் சம்பியன் மயன்றரும் புத்திரி மந்தோ
தரியெ னுமியை யிராவணன் றன்மனை வாழ்விற்
குரிய ளாமெனக் கடிமணம் புணர்ந்தன னுவப்பால்.

8 மாது மற்றவள் வயிற்றிடை யொருமகன் வந்தான்
மீது போமுகி லாமென முழங்கலான் மேக
நாத னென்றதோர் நாமமும் வலாரியை வென்றே
ஓது மிந்திர சித்தெனு நாமமு முற்றான்.

9 நீது மேவிய ராவணன் றனதுவெந் திறலாற்
பாத லம்புவி முதலிய வுலகெலாம் பயந்து
கேத மெய்திட வென்றுபே ரழகினாற் கிளர்ந்த
மாதர் தம்மையுந் தன்பெரு வலியினாற் கவர்ந்தான்.

10 ஏசில் வேதநூல் சொல்லிய பொருள்களை யிகழ்ந்து
மாசில் வேதியர் குலமெலாம் வருந்திட வாட்டி
வாசவன் றனை மகனெடும் வந்துபோர் புரிந்து
பாச மேகொடு பிணித்தன னருஞ்சிறைப் படுத்தான்.

11 தேவர் கோமகன் றருக்களை மணிகளைத் திறல்சேர்
ஏவ லாளராற் கொணருவித் திலங்கைமா நகரின்
மேவ நாட்டினன் தேவருக் கிடுக்கணும் விளைத்தான்
பாவ காரிகள் பார்ப்பரோ பிறர்படுந் துயரம்.

12 அன்ன காலையில் வருந்திய தேவர்க ளயனைத்
துன்னி யன்னவன் கொடுமைகள் யாவையுஞ் சொன்னார்

பன்னு நான்மறைக் கிழவனுங் கேட்டுளம் பரிந்து
பின்னர் வானவர் தன்னொடும் பின்வரச் சென்றான்.

13 சென்று பாற்கடல் சேர்ந்தனன் செம்பொருள் வாய்ந்து
நன்று மேவிய பலவித துதிகளு நவின்றான்
வென்றி மாயனுந் துதிகளான் மிகமனம் மகிழ்ந்தே
இன்று நீவருங் காரணம் யாதுகொ லென்றான்.

14 செய்ய தாமரைக் கிழவனுந் தேவர்கண் முனிவர்
நைய ராவணன் செய்திடுந் தீங்கெலா நவில
ஐய வந்தன னெந்தைநின் னருள்சிறி துண்டேல்
உய்தி கூடுவங் காத்தரு ளெமையென வுரைத்தான்.

15 அந்த வாசகங் கேட்டரு ளச்சுத மூர்த்தி
மைந்த நீபயங் கொண்டது மற்றினிப் போதும்
இந்த வானவர் தம்மொடுஞ் செல்லுதி யாமே
சிந்தை நொந்திடுந் தேவரைப் புரப்பது திண்ணம்.

16 வெய்ய ராவணற் கொன்றிட விரைவினில் யாமும்
வையங் காத்திடுந் தசரதன் மைந்தனுப் வருவேம்
பொய்ய னுமவன் றன்னொடும் போர்புரி காலைத்
துய்ய வானவ ரெமக்கருந் துணைசெயும் பொருட்டு.

17 ஒன்றுந் தத்தம கூறுக ளூற்றிடப் புவியிற்
றுன்றும் வானர வடிவொடுந் தோன்றிடக் கடவர்
என்று நாரணன் பிரமனுக் கியம்பினன் மறைந்தான்
அன்று வானவர் பின்வரப் பிரமனு மகன்றான்.

18 பின்ன ரிந்திரன் வாலியைப் பெற்றனன் வலிமை
துன்னு சுக்கிரீ வன்றனைச் சூரியன் பெற்றான்
அன்ன வாயுவு மநுமனைப் பெற்றன னதற்கு
முன்னர் நான்முகன் றந்திடச் சாம்பவன் முளைத்தான்,

19 ஏனை வானவ ரேனைய குரங்குக ளாகி
மாநி லத்திடை வந்தனர் வாலியக் குரங்குச்
சேனை காவல னாகியே சென்றுகிட் கிந்தை
ஆன மாமலை வகின னாசியல் செலுத்தி,

20 அன்ன காலையி லயோத்திவாழ் தசரத னென்னும்
மன்னன் கோசலை சுமித்திரை மாதுகை கேயி
என்னு மூவருந் தேவிய ரென்னினும் புதல்வர்
இன்மை நாடியே யிருந்துயர்ப் பெருங்கடற் படிந்தான்.

21 உரிய மந்திரி சுமந்திர னுரைத்தசொற் படியே
அரிய வன்கலைக் கோட்டுமா முனிவனை யழைத்துக்
குருவ சிட்டனுங் கூடிடக் குமாரைப் பயக்கும்
பெரிய வேள்வியைத் தசரதன் பிழையறச் செய்தான்.

22 உற்ற வேள்வியி லவியொடு முதித்தொரு பூதம்
கொற்ற வன்கரத் தவியினைக் கொடுத்துநீ யிதனை
உற்ற தேவியர் மூவர்க்கு முதவெனச் சொல்லி
மற்ற வேள்வியிற் கொம்மென மறைந்ததை யன்றே.

23 மன்ன னீந்திட வவியினை மனைவிய ருண்டே
அன்ன காலமற் றவன்றனுற் கருவினை யடைந்தார்
பின்னர் நாளடைந் திராமனைக் கோசலை பெற்றாள்
பன்னு கேகயன் புதல்வியும் பரதனைப் பெற்றாள்.

24 இகலி லக்குவன் சத்துருக் கன்னென யாரும்
பகர வந்திடு மிருவரைச் சுமித்திரை பயந்தாள்
மகித லந்தனின் மைந்தர்க ணால்வரும் வளர்ந்து
சகல கல்வியும் வல்லராய்த் தயங்கின ரன்றே.

25 ஓது மென்பெரு வேள்வியை யூறுக ளகற்றிப்
பாது காத்திட விராமனைத் தருகெனப் படைக்கைக்
காதி காதலன் கோசிகன் கடிதவ ணடைந்து
தாதை யாகிய தசரதன் றன்னிடங் கேட்டான்.

26 உரிய மைந்தனைப் பிரிந்திட வுளமில னேனுங்
குருவின் வாசக மறுப்பதற் கஞ்சினன் கொடுபோய்
எரிகொள் வேள்வியைக் காக்குமா றிலக்குவ னோடுங்
கரிய மைந்தனைக் கோசிகன் கரத்தினிற் கொடுத்தான்.

27 கொடுத்த மைந்தரைக் கோசிகன் கொண்டுபோய் வெற்றி
அடுத்த பல்வகை வித்தைக ளளித்தன னிராமன்

தடுத்து வந்தெதிர் தாடகை தனைமுனி சொல்லால்
வடித்த வம்புதொட் டாருயிர் நீத்திட வதைத்தான்.

28 கருது மைந்தர்க டம்மொடுங் காமனுச் சிரமம்
மருவிக் கோசிகன் மகஞ்செய் வரக்கரும் வந்தார்
வருசு வாகுவைப் பிறர்தமை வதைபுரிந் திராமன்
எரிகொள் வேள்வியைக் காத்தன னிலக்குவ னேடும்.

29 காக்கும் வேள்வியை முடித்தபின் காளைய ரோடும்
ஆக்கு மாதவக் கோசிக னணிமதின் மிதிலை
நோக்கி யேகினன் வழியிடை நூதன மாகப்
பார்க்கு மாறொரு கல்லுருக் கிடந்தது படிமேல்.

30 காணுங் கல்லினை யிராகவன் கழலடிப் பொடியால்
நாணும் பெண்ணுரு வாக்கியி தென்னென நன்மை
மாணுங் கோசிகன் மற்றிவள் கோதமன் மனைவி
பேணுங் கற்பிழந் திவ்வுருப் பெற்றன ளென்றான்.

31 அந்த மாதினை யம்முனி யிடத்தினி லருளி
முந்து மூவரு மிதிலையை யடைந்தனர் முன்னே
வந்த வில்லினை யிராகவன் வளைத்தனன் சனகன்
சிந்தை கொண்டனன் சீதைதன் றிருமணச் செய்கை.

32 தூதர் மாமணச் செய்தியைச் சென்றனர் சொல்லத்
தாதை யாகிய தசரதன் முதலியோர் தாமும்
ஓது மற்றைய வேந்தரும் பிறரும்வந் தொருங்கு
தீது நீங்கிய மிதிலைமா நகரியிற் சேர்ந்தார்.

33 அநக னாகிய ராமனு மங்கிசான் றாகச்
சனகன் மாமகள் சீதையை வேட்டனன் றங்கள்
மனமு வந்திடு மங்கையர் மூவரை யிளைய
புனிதர் மூவரும் வேட்டனர் தனித்தனி பொருந்தி.

34 வேட்ட மைந்தருந் தந்தையு மிதிலையிற் சனகன்
பூட்டு மன்பினுக் குரியராய்ச் சிலபகல் போக்கிக்
கூட்ட மெய்திய கொடிமதி லயோத்தியை யெண்ணி
ஈட்ட மாகிய கிளையொடு மெழுந்தனர் போனார்.

35 எழுந்து போதரும் வழியிடை யெதிர்ந்துதன் வீரம்
மொழிந்து தோன்றிய பரசுரா மன்வலி முற்றும்
அழிந்து போதர விராகவன் வென்றன னயோத்திச்
செழுந்த ராதலம் யாவரு மடைந்தனர் சென்று.

36 வனிதை சீதைபோ டிராகவன் மனமகிழ் வாகி
* வினிதை வாழுநாண் மாமனைக் காணுதல் வேண்டி
நனித லங்கிய கேசய நாட்டினை நோக்கி
இனிது சென்றனன் பரதன்மற் றிளவலும் போனன்.

அயோத்தியாகாண்டம்.

---

37 எவ்வர மெனினு மீவேன் வரமிரண் டென்ன முன்னம்
தெவ்வலி யடக்கும் வேந்தன் செப்பிய வார்த்தை யெண்ணி
அவ்வா மிரண்டுங் கேட்க வமைந்துகை கேயி நின்றாள்
கைவருஞ் சூழ்ச்சி மிக்க கடியவள் கூனி சொல்லால்.

38 காட்டினிற் போக வேண்டுங் கரியவன் பரத னிந்த
நாட்டினை யாள வேண்டு நவிலுமிவ் வரமி ரண்டும்
வேட்டிடு கின்றே னின்றே தந்தரு ளென்று வேந்தைக்
கேட்டன ளிரக்க மில்லாக் கேகயன் புதல்வி மாதோ.

39 வேந்தனும் வரங்கொ டுத்தான் வீரனு மதனைக் கேட்டு
வாய்ந்திடுங் காடு செல்ல வழிக்கொளும் போதிற் சீதை
தேர்ந்துடன் வருவே னென்று சேர்ந்தன ளிளைய கோவும்
சேர்ந்தனன் மூன்று பேருஞ் சென்றனர் கான நோக்கி.

40 நாடுகள் கடந்து வந்த நதிகளுங் கடந்து கங்கை
கூடுறுஞ் சிருங்கி பேரக் கோநகர் சென்று வைகி
நீடுறுங் கங்குலொன்று நீத்தனர் குகனென் றோதும்
வேடுவ னன்பிற் செய்த வெவ்வழி பாடு கொண்டே.

---

* வினிதை—அயோத்தி.

41 இனியிவ ணிருக்கை கொண்டா லெம்மவர் வருவ ரென்று
குனிதரும் வரிவில் வேடன் குகன்கொணர் ஓட மேறிப்
பனிதருங் கங்கை நீங்கிப் பாங்கினிற் பாத்து வாச
முனிவரன் சாலே நண்ணி முன்விருந் தாகி நின்றார்.

42 உத்தமன் பாத்து வாச னோதிய வார்த்தை கொண்டு
சித்திர கூட மென்னுந் திருமலை யடைந்தா ரந்தப்
புத்திரன் செய்கை கேட்டுப் பூபதி யுடலம் விட்டான்
அத்திரு நகர மெல்லா மழுகுரன் மலிப மாதோ.

43 கிட்டிய குருவின் வாக்காற் கெழுமிய வமைச்சர் மன்னர்
சட்டகம் பழுது ருது தைலத்தின் மாட்டி வைத்துப்
பட்டுள கருமந் தேறாப் பாதனோ டிளவ லுக்கு
விட்டனர் தூதர் தம்மை விரைவினில் வருக வென்று.

44 தூதுவர் வார்த்தை கேட்டுச் சுமித்திரை புதல்வ னோடும்
போதரும் பாதன் வந்து புகுந்தன யாவுந் தேர்ந்து
தாதையா ருடலந் தன்னைத் தைலத்தி னின் றெடுத்துப்
பேதமில் கிரியை யெல்லாம் பிழையறச் செய்த பின்னர்.

45 தாதையைத் துயரிற் போக்குந் தாயினைக் கடிந்து கூறி
மேதினி யாளு கென்று வெண்டும்வா சகமு நீக்கிக்
கோதறு மாசில் வைக விராமனைக் கொணரு மாறு
மாதுய ரத்தி னோடும் வனநெறி மருவி னானே.

46 சித்திர கூடஞ் சென்று தேவியை யிளைய கோவை
அத்தனை யணுகிக் கண்டா னடைந்தகா ரியமுஞ் சொன்னான்
அத்தனு மவனை நோக்கி யையநீ வந்த செய்கை
எத்திற மென்ன வுன்னை யான்கொடு போக வென்றான்.

47 யாதுரை செயினுங் கொள்ளே னொழிரு வருடம் மீண்டே
தாதைசொல் வழாமல் வாழ்ந்து தனிநகர் பின்பு சேர்வேன்
போதுமந் நாள்வ ரைக்கும் போய்ப்புவி யாளு கென்று
பாதுகை யிரண்டு மீந்தான் பாதனும் பெற்று வந்தான்.

48 தந்தபா துகையி ரண்டுந் தனித்துணை யாகக் கொண்டோன்
நந்தியங் கிராமம் வைத்து நானிலங் காவல் பூண்டான்
முந்தியம் மலையிருந்தோர் மூவரு மத்தி ரிப்பேர்
அந்தண னிருக்கை யெய்தி யதிதிபூ சனையும் பெற்றார்.

ஆரணியகாண்டம்.

---

49 அத்திரி முனிவன் வைகு மாச்சிர மத்தை நீங்கித்
தத்துநீர் மிக்க சோலைத் தண்டகா ரணியம் புக்கு
மெய்த்தவ ருறையுஞ் சாலை வேறுவே றாகப் போகி
அத்தவ ரருளும் பெற்று ரகத்திய னருளும் பெற்றார்.

50 குடமுனி யிடத்தி ராமன் குனிசிலை யாதி தெய்வப்
படைகளும் பெற்று நண்பின் பண்புறு சடாயு வின்பால்
மடநலா டனைப்பு ரக்கும் வாக்கையும் பெற்றுப் பஞ்ச
வடியெனு மிடத்திற் போனான் மற்றவ ரோடு மாதோ.

51 வாவிநீர் சூழும் பஞ்ச வடியிடைத் தனது கையால்
ஆவிபோன் றினிய தம்பி யாக்கிய பன்ன சாலை
தேவியுந் தானு மாகச் சென்றுவீற் றிருந்தா னென்ப
தேவர்தந் துயர நீக்கத் திருவவ தாரஞ் செய்தோன்.

52 ஆயிடை வைகு நாளி லரக்கிசூர்ப் பநகை யென்னுந்
தீயவள் வந்து கண்டு செம்மலை யிச்சை கொண்டாள்
ஆயவன் மறுத்தான் பின்ன ரநுசனும் வெறுத்து நீத்தான்
போயவள் சிறிது தூரம் பொருக்கென மீண்டும் புக்காள்.

53 சீதையைப் பற்றிச் செல்லத் தியவ டொடர வன்னாள்
காதொடு மூக்குஞ் சிந்தக் கடிந்தன னிளைய கோமான்
பாதகி சென்று சொல்லப் படையொடு கரனும் வந்தான்
தீதுறு மவனை மற்றைத் தியரோ டிராமன் கொன்றான்.

54 தீயவள் சோகத் தோடுஞ் சென்றுதென் னிலங்கை யாளும்
நாயக னிராவ ணற்கு நடந்தவை யாவுஞ் சொன்னாள்

தீயவன் யாவுங் கேட்டான் சீதைமே லிச்சை கொண்டு
மாயமா ரீசன் றன்னை வருகநீ துணையா வென்றான்.

55 மானுரு வெடுத்துக் கொண்டு மாயமா ரீசன் சென்று
சானகி முன்னே நிற்பச் சானகி யீது பொன்னின்
மானிதை நீபி டித்துத் தருகென வாஞ்சை கொண்டு
கோனடி பணிந்து கேட்டாள் கோனுமங் கதன்பின் போனான்.

56 போனவன் கைக்கெட் டாமற் பொன்னின்மான் போத லோடும்
யானிது பிடித்தற் கொல்லா தென்றவன் சரத்தால் வீழ்த்த
மானது சீதா லக்கு மணாவென வுரைத்த சொல்லைச்
சானகி கேட்டு நோவத் தம்பியும் பின்பு போனான்.

57 தம்பியும் போன பின்பு சானகி தனிய ளாகி
இம்பரில் வைகுங் காலை யிராவணன் றுறவி வேடம்
நம்புறக் கொண்டு சென்று நங்கையைக் கவர்ந்து செல்ல
உம்பரிற் சடாயு கண்டங் குருத்தவ ணெதிர்ந்தா னன்றே.

58 தாக்கியங் கெதிர்ந்து நின்ற சடாயுவைச் சிறகு போக
நீக்கியிந் நிலத்தில் வீழ்த்தி நெட்டக ழிலங்கை புக்குப்
பூக்கம ழசோகங் காவிற் பூவையை யிருக்க விட்டுக்
காக்குமா றினிது வைத்தான் கடியசொல் லரக்கி மாரை.

59 பொன்னின்மா னதன்பின் போன பூபதி தம்பி வந்து
சொன்னவா சகங்கள் கேட்டுத் துயர்ப்பெருங் கடலின் மூழ்கிப்
பன்னசா லைக்கண் வந்து பாவையைக் காணா னாகி
இன்னலுற் றழுங்கி நின்று னிருவருந் தேட லுற்றார்.

60 இருவருந் தேடுங் காலை யிறகற்று வலியுங் கெட்டுத்
தரையினிற் கிடக்கு மந்தச் சடாயுகண் டவட்கு நேர்ந்த
கருமமும் வழியிற் சொன்ன காதையும் பிறவுங் கூறி
விரைவினி லுடலம் விட்டான் வீரருந் தகனஞ் செய்தார்.

61 அங்குவர் திகழ்ச்சி செய்த வயோமுகி யென்னு நாம
மங்கையை யிளைய கோமான் வன்செவி நாசி கொய்தான்
தங்களை யெடுத்துச் சென்ற கவந்தனைத் தம்பி யோடு
புங்கவ னறுத்து வீழ்த்தா னவனுந்தே வுலகம் போனான்.

62 தேவுல கேகுங் காலைச் சீதையைத் தேடு தற்குத்
தாவுசுக் கிரீவன் றன்னைச் சாருதி யென்று சொன்னான்
ஆவதுங் கேட்டா ரின்ன ரவ்விடம் விட்டுத் தென்பான்
மேவினர் சவரி வைகும் விரதவாச் சிரமஞ் சேர்ந்தார்.

63 சவரியாச் சிரமம் புக்குச் சவரிபூ சனையும் பெற்றுக்
கவலையி னெடுந் தென்பா லருஞ்சுரங் கடந்து சென்று
குவடுகள் பலவுஞ் சூழ்ந்து குலவுகிட் கிந்தை யென்னும்
புவிபுகழ் மலையிற் போந்து புலம்பொடு மிருந்தா ரன்றே.

கிட்கிந்தாகாண்டம்.

64 சுக்கி ரீவ னனுமனெனச்சொலும்
மிக்க வானர வீர ரிருவரும்
அக்கி ரிக்க ணிருந்தன ராடுபோர்
புக்கு வாலி பொருவலிக் கஞ்சியே.

65 இருந்த வானர வீர ரிருவருட்
டிருந்து மாருதி சேர்ந்த விருந்தரைத்
தெரிந்து மற்றவர் செய்கை முழுவதும்
பரிந்து கேட்க வவர்களும் பன்னினர்.

66 தொக்க மைந்தர்கள் சொல்லிய யாவையுஞ்
சுக்கி ரீவற்குச் சொல்லி யவனையும்
புக்கு மைந்தர்க ளோடு பொருத்தினன்
மிக்கு நண்பு வளர்ந்து விளங்கவே.

67 ஒருவர் செய்தி யொருவ ருணர்ந்திட
இருவர் தாமு மியம்பினர் வாலியைப்
பொருவ னென்றனன் புங்கவன் மற்றவன்
தருவ னென்றனன் றையலை நாடியே.

68 காமம் வாலி வலிமையு நண்ணிப்போ
ராடித் தன்னை யலைத்ததுந் தன்மனை

கூடுந் தேவியைக் கொண்டதுஞ் சீதையைத்
தேடி வந்தவர் தேற விளம்பினன்.

69 நிலங்கி டந்து நிமிர்ந்து மலையென
அலங்குந் துந்துபி யாக்கை யெலும்பினைக்
கலங்கி வந்தவர் கண்டிடக் காட்டினன்
துலங்கும் வெவ்வலி சோதனை செய்யவே.

70 கரிய கோமகன் காட்டித் தனக்குச்சுக்
கிரிவன் சொன்னதுங் கேட்டுத்தன் காற்பெரு
விரலி னெற்றினன் விண்ணெழுந் தம்மலை
ஒருக ணத்தினு ளோடிற்று நீளிடை.

71 பாரை மேவி யுயர்ந்து படைகளும்
விராவு தற்கருந் திண்மை விளங்கிய
மராம ரத்தொகை காட்டினன் மற்றவை
இராமன் பாணமொன் றேழுந் துளைத்ததே.

72 இந்த வீர ரிருவரு மெம்பகை
சிந்து வாரெனச் சிந்தை மகிழ்ந்திடும்
அந்த வீரரு மம்மையைத் தேடிட
வந்த வீரரு மம்மலை வைகினர்.

73 வருக போர்க்கென வாலியைத் தம்பிசுக்
கிரிவன் வீரங் கிளந்தறை கூவினன்
விரைவின் வாலியும் மேவ வவனொடும்
பொருத தம்பி புறங்கொடுத் தேகினன்.

74 ஏகும் வீர னிராமனொ டெண்ணியே
வாகை வாலியைப் பின்னும் வருகெனப்
போக வந்தவ னும்பொரப் புங்கவன்
வேக வாளி மறைந்து விடுத்தனன்.

75 விட்ட வாளி விரைந்துதன் மார்பகம்
பட்டு வாலி சுவர்க்கம் படர்ந்தனன்
கிட்டு மச்சுக் கிரிவன்கிட் கிந்தையிற்
பட்ட மெய்தி யரசியல் பற்றினன்.

76 சென்று வீர ரிருவருந் தென்றிசை
நின்ற மாலிய வானெனு நீண்மலை
துன்றி யீரிரு மாசந் தொலைத்தனர்
வென்றி வீரன் விளித்தனன் றம்பியை.

77 ஈட்ட வானர வேந்தனை யிவ்விடைக்
கூட்டி வாவெனக் கொற்றவன் கூறலும்
கேட்ட தம்பி யழைக்கக் கிளர்ந்தவன்
கூட்டி னத்தொ டிராமனைக் கூடினன்.

78 கூடும் வானரக் கோமகன் சீதையைத்
தேடும் வண்ணந் திசையொரு நான்கிலும்
ஓடும் வானர வீரரை யுய்த்தனன்
தேடு வீரெனுஞ் செம்ம லுரையினால்.

79 சீதை கண்டு தெளிந்து துணிந்திட
ஏத மற்ற விதனைக் கொடுவென
நாத னீந்திடு நல்விர லாழியும்
பேத நீங்கு மநுமனும் பெற்றனன்.

80 அநும னங்கத னாதியர் தென்றிசை
நனிபு குந்துசம் பாதி நவின்றிடும்
வனிதை வாய்மொழி வார்த்தையுங் கேட்டனர்
இனிது தென்கட லெல்லை மருவினர்.

81 மருவு தென்கடல் வாரி யிலங்கைபுக்
கரிவை செய்கை யறிந்துடன் வந்திட
ஒருவ ரேனு முடன்பட் டிலருளம்
வெருவி வானர வீரர் குழாத்துளே.

82 தற்பு கழ்ந்துரை சாம்பவன் கூறிடப்
பெற்ற மாருதி போகை பெருகியே
பொற்பி னேடு பொலிந்து மகேந்திர
வெற்பி னுச்சியி லேறி விளங்கினன்.

சுந்தரகாண்டம்.

---

83 அடல்பெருகு மாருதியு மம்மலையின் மீதெழுந்து
மிடல்பெருகு மைந்நாக மீதெழுந்து வருவதும்பார்த்
துடலொருவ வருமரக்கி யுயிரையுங்கொன் றவ்வழியே
கடலழுவந் தாவியிலங் காபுரியுங் கண்டனனே.

84 வாவியெழ மாருதியும் வழிமறிக்கு மிலங்கைமகா
தேவிதனை வலிதொலைத்துத் திறலரக்கர் நகரியிற்போய்ப்
பாவியிரா வணன்றுயிலும் பான்மையும்பார்த் தசோகமரக்
காவிலிருந் தொருவனிதை கலங்குவதுங் கண்டனனே.

85 இங்கிவளா ரெனவநுமா னிலைமறைக்கு மரக்கிளையில்
தங்கியிருந் துளமயிர்க்குஞ் சமயத்தி லிராவணனும்
மங்கையிடம் வந்தெனக்கு மனையவளா கெனவிரப்ப
அங்கவளுங் கடிந்துரைத்தா ளவனுமகன் றேகினனே.

86 பாதபத்தின் மிசையிருந்தோன் பலவாறு புலம்புகின்றாள்
சீதையென நிச்சயித்துச் சிந்தைமகிழ்ந் தனிமையிற்போய்க்
காதலன்றன் செய்கையெலாங் கட்டுரைத்துத் தான்கொணர்ந்த
மோதிரமு மவளிடத்தின் முறைநின்று கொடுத்தனனே.

87 நலங்கிளரு மோதிரத்தை நாதனணி யீதெனவே
கலங்கிமனம் வெய்துயிர்த்துக் காதலனைப் பிரிந்துநின்ற
பொலங்கொடியு மிங்கிதனைப் புங்கவன்பாற் கொடுத்தியென
அலங்கியசூ டாமணியை யநுமனிடங் கொடுத்தனளே.

88 சூடைமணி தனைப்பெற்றுத் தூதனெனு மநுமானும்
பீடையினிக் கொளவேண்டாம் பெண்ணணங்கே வெம்போரிற்
கேடுசெயு மிராவணனைக் கிளையோடு முடிவெய்தச்
சாடியுனை யும்மழைத்துத் தன்னகரஞ் செல்லுவனே.

89 என்றுசொலி யநுமானு மவ்விடம்விட் டேகியயல்
நின்றபொழி லிறுத்தழித்து நேர்ந்தவக்கன் முதலாகத்
துன்றியதொல் லரக்கர்குலந் தொலைந்தொழியக் கொன்றழித்துக்
கன்றியவிந் திரசித்தாற் கட்டிடவும் பெற்றனனே.

90 கட்டுடனே மாருதியைக் கைக்கொடுபோ யிராவணன்முன்
விட்டிடலு மபவாதம் வெறுத்துரைத்த ராவணற்குப்
பட்டமுறுந் தசரதனார் பாலகன்றன் பெருமையெலாங்
கட்டுரைத்துத் தன்வலியுங் கலங்காது காட்டினனே.

91 தோல்வியுறு மரக்கரெலாஞ் சூழ்ந்தனுமன் வாலினிடைச்
சீலைபல பந்தமுறச் செய்துதீயி லழும்விட்டு
வாலெரிகவெனக்கொளுத்த வளர்நெருப்போ டெங்கணும்போய்க்
கோலவிலங் காபுரியைக் கொளுத்திமுற்ற வெரித்தனனே.

92 கலங்கவெரி கொளுத்தியபின் கடல்கடந்து வானரத்தின்
குலங்களைச்சேர்ந் தவற்றினொடுந் நொம்மெனா மனையணுகி
இலங்கைநக ரிடைநிகழ்ந்த செய்கையெலா மியம்பியபின்
அலங்கியசூ டாமணியு மவன்கரத்தி னீந்தனனே.

93 புக்கிலங்கை நகரியிடைப் பூரியன்மேற் பொரல்கருதிச்
சுக்கிரிவன் முதலாகச் சொல்லியவா னரங்களொடும்
மிக்கதச ரதன்புரிந்த விழுமியமா தவப்புதல்வன்
தெற்கினுறும் பெருங்கடலின் றிரைக்கரையைக் கண்டனனே.

94 முன்னவனோ டும்பகைத்து மூதுணர்ந்த வீடணனும்
பின்னவனுஞ் செயராம பிரானருகில் வந்தணைந்தான்
அன்னவனை யினியிலங்கைக் கரசாக வபிடேகஞ்
சொன்னமுறை யாற்புரிந்து தூயவனும் வைத்தனனே.

95 ஆயபெருங் கடற்கிடையே யணையென்னுஞ் சேதுவினை
நாயகனா கியராம னளனைக்கொண் டாற்றுவித்துப்
பாயுநெடு வானராம் படைகளொடு மவ்வழியே
தீயர்செறிந் திடுமிலங்கைச் சுவேலமலை சேர்ந்தனனே.

யுத்தகாண்டம்.

96 பின்னி ராகவன் பணித்திடப் பெருவலி யமைந்து
முன்னர் நின்றிடு நீலனே முதலவா னரர்கள்
இந்நி லஞ்செறி கல்லொடு மரங்களை யெடுத்து
முன்ன ரேகியே யிலங்கையை முற்றுகை செய்து.

97 தீய ராவணன் பணியினாற் போரிடைச் சேர்ந்த
மாய வனபிர கத்தனை மற்றுளார் தம்மைக்
காயம் விட்டிடப் பொருதனர் கடுந்திற லரிமா
மேய வன்மையுங் காட்டினர் வீரமேல் கொண்டு.

98 சுக்கி ரீவனு மநுமனு மராமரந் துளைத்த
அக்கு மாரனுந் தம்பியு மமரிடை வந்து
புக்க வெந்திற லரக்கரை வேரோடும் போக்கி
மிக்க வீரமுங் காட்டினர் தேவர்கள் வியப்ப.

99 அன்ன போதினி விந்திர சித்தெனு மடலோன்
மன்னன் மைந்தரா மிராமலக் குவர்களை வன்மை
துன்னு நாகபா சத்தினாற் பிணித்தனன் றொடர்ந்து
பன்ன காரிவந் ததன்வலி தொலைத்தனன் பறக்க.

100 சம்பு வெள்ளியம் பொருப்பினை யெடுத்தவன் சவியா
தம்பு வில்லிடைப் பூட்டியே யமரிடை யெதிர்த்துத்
தும்பை சூடிய ராகவன் பொருதிடத் தொலைந்து
கும்ப கன்னனைத் துயிலெடுத் தேவினன் கொதித்து.

101 பன்னும் போரினி லரக்கர்கள் பலரொடும் வந்து
துன்னி வானர வீரரைத் தொலைத்து னுங் கும்ப
கன்ன னுருயிர் நீங்கிடக் கடிதினிற் றொலைத்தான்
முன்னம் வாலியை மார்பகந் துளைத்திடு முதல்வன்.

102 தீய விந்திர சித்துபின் போரிடைச் சேர்ந்து
சேய தாமரை யாசனன் படையினைச் செலுத்தித்
தூய ராமனைத் தம்பியை வானரத் தொகையை
மாய மாகவே மயக்கின னறிவெலா மாள.

103 சண்ட வாயுவின் றிருமகன் வடதிசை சார்ந்து
கொண்டல் சேர்வுறு மருத்துமா மலையினைக் கொணர்ந்து
மண்டு மோகநீத் தவரெலாம் வாழ்ந்திடச் செய்து
பண்டு போலவம் மலையையும் வைத்தனன் படர்ந்து.

104 இந்நி லத்தினி னிகும்பலை யெனுமிடங் குறுகிப்
பன்னும் வேள்வியொன் றுற்றின னிந்திரன் பகைவன்
சொன்ன விடணன் றன்னொடுஞ் சுமித்திரை மைந்தன்
அன்ன வேள்வியை யழித்தபின் னவனையு மழித்தான்.

105 வெட்ட வேள்விபோய் மைந்தனும் விளிந்திடுஞ் செய்தி
கேட்டி ராவணன் கோபதா பத்தொடுங் கிளர்ந்து
திட்டும் வெஞ்சரஞ் செலுத்திவா னரங்களை வருத்திப்
பூட்டும் வார்சிலை பிராமனொ டருஞ்சமர் புரிந்தான்.

106 வெருவும் போர்பல விராமனும் வியந்திட வாற்றிப்
பிரமன் வெம்படை விட்டிரா வணன்முடி பிறங்குஞ்
சிரமெ லாமறுத் தொழித்தனன் செயசெய வென்றே
விரியும் பூமழை விண்ணவர் சொரிந்தனர் வியந்து.

107 அரக்கர் தங்களுக் கரசனா யமர்ந்துதென் னிலங்கை
புரக்க விடணன் றனைவிடுத் தெரியுளே புகுந்து
பொருக்கெ னச்சுசி யெய்தியே புறம்வருஞ் சனகன்
திருக்கு மாரியை யழைத்தன னிராமனுஞ் சேர்ந்து.

108 ஐய னிந்திரன் வரத்தினா லவ்விடை நிகழ்ந்த
வெய்ய போரினி லிறந்திடும் வானர வீரர்
உய்யு மாறெழுந் தவரெலா முவந்திடச் செய்தான்
செய்யவாகிய பொருள்பல சிறப்பொடும் வழங்கி.

109 மாது தன்னொடி லக்குவன் றன்னொடும் வானிற்
போதும் புட்பக மேறிமுன் னநுமனைப் போக்கித்
தீதில் விடணன் றன்னொடும் வானரர் சேர
நாத வேகினன் விரைவினி லயோத்தியை நாடி.

110 அநுமன் சொல்லினாற் பரதன்றன் செய்தியு மறிந்து
தனைய ழைத்திட வந்தவர் தம்மொடுஞ் சார்ந்து
குனியும் வில்லுடை ராகவன் கோதறு முனிவர்
புனையும் வேடநீத் தணிமதி லயோத்தியிற் புக்கான்.

111 குருவ சிட்டனும் பிறரும்வந் திராமனைக் குறுகி
அரசு செய்கென வணிமுடி சூட்டின ரவனும்
விரியும் வெண்குடைநி ழற்றியே மேதினி புரந்தான்
அரிவை தன்னொடு மயோத்திமா நகரினி லமர்ந்து.

உத்தரகாண்டம்.

---

112 கலக மாற்றிய ராவணன் கவர்ந்துகொண் டகன்ற
திலக வாணுதன் மனைவியைச் சேர்த்தன னென்றே
உலகம் பேசிய பழிமொழிக் குள்ளக நாணி
விலக நீக்கினன் சீதையை யிராமனும் வெறுத்து.

113 விலக்குஞ் சீதையைக் காட்டினிற் கொண்டுபோய் விரைவில்
இலக்கு வன்விட வெதிர்ந்துவான் மீகிமா முனிவன்
குலக்க ருந்தவ மேவுமாச் சிரமத்திற் கொடுபோய்
அலக்க ணீங்கிட விருத்தியா தரித்தன னவளை.

114 மெய்த்த போதனர் வேண்டிட ராமனும் விரைந்து
சத்து ருக்கனை யேவினன் சாடுமா றவனும்
யுத்த மேவியே யிலவண னுயிரினைச் சாடி
அத்த போதனர் குழுவினை யன்பொடுங் காத்தான்.

115 சனகி போன்றவோர் வடிவினைச் செந்நிறந் தயங்கும்
கனக மேகொடு செய்துவைத் தருமகங் கண்ட
அனக னச்சுத னிராமன்பா லன்பொடுங் கொடுபோய்ச்
சனகி தன்னையுங் கொடுத்தனன் றவப்பெரு முதல்வன்.

116 அன்ன நாயக னெஞ்சக மயிர்த்திட நின்ற
பன்னி பூமகள் சிதையும் பரிவொடு வேண்ட
அன்னை யாகிய நிலமக ளளித்திடுந் துவாரம்
தன்னி லின்பொடும் புகுந்தனள் கற்பிய றயங்க

117 வண்ண வார்சிலை முரித்தவ ளுணையின் வழியே
தண்ண றம்புனற் சரயுவென் றிருநிலம் புகலும்
அண்ணன் மாநதி முழுகியே யாக்கையும் விடுத்து
விண்ண டைந்தனர் வானர வீரரு மாதோ.

118 பாதனொடுசத் துருக்கனும் பழைபதம் வடிவம்
மருவி வைகினன் மாநட வடிவினை விடுத்து
வரத சின்மய ராமனும் வைகுந்தநி லயம்
விரவி பாருயிர் புரந்துவிற் றிருந்தனன் மாதோ.

வாழி யந்தணர் மன்னவர் பின்னுளோர் மறைகள்
வாழி மாமுகி லறநெறி வைதிக சைவம்
வாழி சேர்தமி ழிலக்கிய லக்கண வரம்பு
வாழி ராகவன் பெருங்கதை மாநிலந் தினிதே.

முற்றிற்று.

அருஞ்சொற்பொருள்.

அக்கன் – இராவணன்மக்களுள் ஒருவன்.
அங்கி–அக்கினி.
அச்சுதன்–விட்டுணு
அடல்–வலி.
அதிதிபூசனை–விருந்தோம்பல்.
அநகன்–பாவமிலி.
அநுசன்–தம்பி.
அபவாதம்–இழிமொழி.
அபிடேகம்–மஞ்சனம்.
அம்மை–தாய்.
அயன்–பிரமா.
அயிர்த்தல்–ஐயமுறுதல்.
அரிமா–சிங்கம்.
அரிவை–பெண்.
அலங்கல்–விளங்கல்.
அவி–தேவருண்.
அழுவம்–பரப்பு.
அறைகூவல்–பொரவழைத்தல்.
ஆக்கை–உடம்பு.
ஆச்சிரமம்–முனிவரிருக்கை.
ஆடுதல்–அடுதல்.
ஆதி–முதல்.
ஆழி–மோதிரம்.
இகல்–வலி.
இகலல்–பகைத்தல்.
இந்திரசித்து-இராவணனுடையமூத்தமகன்.
இராகவன்–இராமன்.
இளவல்–பின்னோன்.
இளையகோ–இளவரசன்.
இன்னல்–துன்பம்.
உடலம்–உடம்பு.
உதந்தம்–சரித்திரம்.
உம்பர்-உவ்விடம்.
உறுத்தல்–பொருத்தல்.
எடுத்தல்–எழுப்பல்.
ஏசு–குற்றம்.
எய்தல்–பொருந்தல்.
ஐயன்–அப்பன்.
ஒன்றல்–பொருந்தல்.
ஓகை–மகிழ்ச்சி.
ஓடம்–வள்ளம்.
கங்குல்–இரா.
கடிதல்–தள்ளல்.
கரியவன்–இராமன்.
கலகம்–சண்டை.
கன்றல்–அடிப்படல்.
கனகம்–பொன்.
கா–சோலை.
காதுதல்–கொல்லல்.
காயம்–சரீரம்.
கானம்-காடு.
கிரி-மலை.
கிளர்தல்-எழுதல்.
குகன்-ஒரு வேடன்.
குடமுனி-அகத்தியர்.
கும்பம்-குடம்.
குவடு-மலையினுச்சி.
கூறு-பங்கு.
கூனி-கைகேயியினுடைய ஏவலாட்டி.
கேதம்-நடுக்கம்
கையன்-கீழ்மகன்.
கொற்றவன்-அரசன்.
கோசிகன்-விசுவாமித்திரன்.
கோது-குற்றம்.
கோலம்-அழகு.
கோன்-அரசன்.
சட்டகம்-உடம்பு.
சம்பு-சிவன்.
சரம்-அம்பு.
சனகி-சீதை.
சாடுதல்-கொல்லல்.
சான்று-சாட்சி.
சானகி-சீதை.
சிந்தை-மனம்.
சிரம்-தலை.
சின்மயன்-ஞானரூபி.
சீதை-இராமபிரான்மனைவி.
சுசு-சுத்தம்.
சுரம்-காடு.
சுவர்க்கம்-தேவலகம்

சுவேலம்-இலங்கையிலுள்ள ஒரு மலை.
சூடைமணி-சூடாமணி.
செம்மல்-தலைவன்.
செயம்-வெற்றி.
செவி-காது.
சோகம்-துயர்.
தகனம்-சுடுதல்.
தசரதன்-அயோத்தியில் இருந்த ஓரரசன். பத்துத்திசையிலுஞ் செல்லுந் தேருடையவன் என்பதுபற்றிவந்த பெயர்.
தண்டகாரணியம்-தண்டகன் என்பவனுடைய நாடாயிருந்து சுக்கிரசாபத்தாற் காடான இடம்.
தராதலம்-பூமி.
தரு-மரம்.
தலைநாள்-முன்னாள்.
தாமரையாசனன்-பிரமன்.
தாபம்-வெம்மை.
தாவுதல்-பாய்தல்.
திண்மை-கலங்காநிலை.
திலகம்-பொட்டு.
தையல்-பெண்.
தைலம்-எண்ணெய்.
நளன்-தேவதச்சன்.
நாகம்-பாம்பு.
நாசி-மூக்கு.
நாதன்-தலைவன்.
நான்முகன்-பிரமன்.
நிமிர்தல்-எழுதல்.
நேயம்-விருப்பம்.
படர்தல்-போதல்.
பந்தம்-கட்டு.
பாரை-பருத்தவரை.
பன்னகாரி-கருடன்.
பன்னசாலை-முனிவர்வாசம்.
பாசம்-கயிறு.
பாதவம்-மரம்.
பாதுகை-மிதியடி.
பாடு-பெருமை.
பாணம்-அம்பு.
பாலகன்-மகன்.
பாவகாரி-பாவஞ்செய்தவன்.
புங்கவன்-சிரேட்டன்.
பூசனை-பூசை.
பூபதி-அரசன்.
பூரியன்-கீழ்மகன்.
பேணல்-காத்தல்.
பேதம்-வேறுபாடு.
பொழில்-சோலை.
மகம்-வேள்வி.
மகிதலம்-பூமி.
மதலை-மகன்.
மணம்-விவாகம்.
மயன்-அசுரதச்சன்.
மாணுதல்-சிறத்தல்.
மாது-பெண்.
மாயம்-வஞ்சகம்.
மாருதி-அநுமான்.
மிசை-மேல்.
மிடல்-வலி.
மீது-மேல்.
முற்றுகை-வளைத்தல்.
மூது-முதுமை.
மோகம்-மயக்கம்.
வயம்-வலி.
வலாரி-இந்திரன்.
வன்மிகம்-புற்று.
வனம்-காடு.
வனிதை-பெண்.
வாகை-வெற்றி.
வாசவன்-இந்திரன்.
வாஞ்சை-ஆசை.
வாவுதல்-பாய்தல்.
வானரம்-குரங்கு.
வித்தை-கல்வி.
விராவல்-கலத்தல்.
விளித்தல்-அழைத்தல், அழித்தல்.
வினிதை-அயோத்தி.
வீடணன்-விபீடணன்.
வென்றி-வெற்றி.
வெற்பு-மலை.
வேதியர்-பிராமணர்
வையம்-தேர்.